விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 309 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 06 புதன்கிழமை (23.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பொருளாதார மத்திய நிலையத்தை யாழ்.மாவட்டத்தில் ஆரம்பித்தல்

### மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொருளாதார மத்திய நிலையத்தை மீள ஆரம்பித்தல் தொடர்பான ஆரம்ப கட்ட கலந்து ரையாடல் யாழ். 15

## வன்னி மாவட்டத்தின் தேர்தலை நிறுத்துக

### உயர் நீதிமன்றத் தீர்ப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக சமர்ப் பிக்கப்பட்ட வேட்புமனுவை நிராகரித்து மாவட்டத் தேர்தல் அதிகாரி எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்து ஆணை பிறப்பிக்குமாறு கோரி ஜன நாயக தேசியக் கூட்ட மைப்புத் தாக்கல் 15

## வரணியில் உண்டியல் உடைத்தவர் மடக்கிப் பிடிப்பு

(சாவகச்சேரி)

வரணியில் கோயில் உண் டியலை உடைத்தவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட வரணி - சிட்டி வேரம் ஆலயத்தில் நேற்று முன்தினம் 15

## அவிசாவளையில் பஸ் விபத்து

### 29 பேர் படுகாயம்


(இரத்தினபுரி)

அவிசாவளை- இரத்தின புரி வீதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற பஸ் விபத்தில் 29 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அவிசாவளை, பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திவுரும்பிட் டியப் பகுதியில் இரண்டு பயணிகள் 15

# யாழ்.நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முடியாது

## லலித், குகன் வழக்கில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய





(யாழ்ப்பாணம்)

2011ஆம் ஆண்டு மனித உரிமை செயற்பாட்டாளர்களான லலித் மற்றும் குகன் ஆகியோர் காணாமல் போன வழக்கில் யாழ்.நீதி மன்றில் சாட்சியமளிக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ள நிவாரணம்

# ரூ.30 மில்லியன் சீனா அரசு உதவி

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தினால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு நிவார ணம் வழங்குவதற்காகச் சீன அரசாங்கம் 30 மில்லியன் ரூபாயை இலங்கைக்கு அன் பளிப்பாக வழங்கியுள்ளது.

ஜனாதிபதி அலு வலகத்தில் நேற்று 15

## இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும்

### இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா ஜனாதிபதியின் செயலாளருடன் கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா 15

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ரணில் இன்று விசேட அறிவிப்பு


(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல் தொடர் பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிடவுள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர் பாகத் தமது பதவிக் காலத்தில் தம்மால் நியமிக்கப்பட்ட 2 விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் தொடர்பாக அவரது விசேட உரை அமை யும் என அவருக்கு நெருக்க மான தரப்பினரால் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைகளில் ஒன்றை முன்னாள் அமைச்சர் உதய 15

## இலங்கை - சீன உறவு தொடர்பில் கலந்துரையாடல்



15

## ரணில் மீது இரண்டு வழக்குகள்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணிலை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு வழக்குத் தொடர உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சோசலிச இளை 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா விசா சேவைகள்



- நிராகரிக்கப்பட்ட விசாக்கள் மீள விண்ணப்பித்துத் தரப்படும்.
- மிகக் குறைந்த கட்டணங்கள்.
- 12 வருட கால அனுபவம்.
- 99% கடந்தகால வெற்றி வீதம்.

முன்பதிவு செய்து நேரில் வரவும்.
ஆலோசனைக் கட்டணம் உண்டு.

முன்பதிவுகளுக்கு : **071 071 6979**

**Winstar Consultants Pvt Ltd**
**45, Vembadi Street, Jaffna.**

(467)


# கேள்வி அறிவித்தல்

**மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை - 2024**

**புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வட மாகாணம்.**

1. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை 2024 மூலமான ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத் தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான C7 / C6 தரத்தில் **வீதி அமைப்பிற்கான** CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப் பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு **புதுக்குடியிருப்பு (தொலைபேசி: 021 229 1023** e.mail : pkipsmullai@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 15.00 மணி வரை 05.11.2024 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 24.10.2024 ம் திகதியிலிருந்து **05.11.2024 ம் திகதி வரை** காலை 09.00 மணிக்கும் மாலை 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **3000.00 (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், **பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** எனும் முகவரிக்கு 06.11.2024 ம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும் கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (06.01.2025) நாட்கள் வரை செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| PSDG/NP/MU/PTKPS/R/2024/07 | CONSTRUCTION OF THAMPAI SANKATHADY ROAD | 5.08 | 91 நாட்கள் | C7/C6 | 60,000.00 | 03/02/2025 |

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **புதுக்குடியிருப்பு** பிரதேசசபை, புதுக்குடியிருப்பு அலுவலக கட்டடத்தில் 30.11.2024 அன்று மாலை 02.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச்செலவில் கலந்து கொள்ள முடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேச சபை பெறுகைக்குழு,**
**புதுக்குடியிருப்பு பிரதேச சபை,**
**புதுக்குடியிருப்பு.**

(C-1436) 23.10.2024

## ரூ. 8 கோடி பெறுமதியான
# போதைப்பொருள்
## விமான நிலையத்தில் மீட்பு

விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்ட போதைப்பொருள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட போதைப் பொருட்களில் 07 கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருள், 1.1 கிலோ குஷ் போதைப்பொருள் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போதைப்பொருள் கையிருப்பின் பெறுமதி 08 கோடி ரூபாவிற்கும் அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள களஞ்சியசாலையில் இருந்து இந்தப் போதைப்பொருள் இருப்பு காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## ரணில்...

ஞர் சங்கத்தினால் 2022ஆம் ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம் மீதான பொலிஸாரின் தாக்குதல் வழக்கில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிரதிவாதியாக குறிப்பிடுவதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த போராட்டத்தில் பொலிஸார் தாக்குதல் நடத்தி கலைத்தமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சோசலிச இளைஞர் சங்க உறுப்பினர்கள் குழுவினால் குறித்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அதன்போது, மனுதாரர் தரப்பின் சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கையைப் பரிசீலித்த உயர்நீதிமன்றம் இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

சோசலிச இளைஞர் சங்கத்தால் மருதானையில் 2022 ஆம் ஆண்டு குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் போராட்டகாரர்கள் மீது கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட 84 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மருதானை டீன்ஸ் வீதியில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களில் 2 பௌத்த பிக்குகள் மற்றும் 4 பெண்கள் உள்ளடங்கியிருந்தனர்.

சட்டவிரோதமாக ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டதாகவும், குறித்த ஆர்ப்பாட்டத்தைக் கலைத்த போது, தொடர்ந்தும் சட்டவிரோதமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவித்தே 83 பேரை பொலிஸ் காவலில் எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் 2022.09.25 அன்று தெரிவித்திருந்தது. (ம-7)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
22 - 04 - 1984

மறைவு
23 - 09 - 2024

## திருமதி தியாகேஸ்வரன் வளர்மதி (பூமா)

நாட்கள் நகர்ந்து 31 ஓடியும்
நம்மனம் ஏற்க மறுக்கின்றது
நங்கையே உன் இழப்பினை!

சுறுசுறுப்பான நடையையும் குரலையும்
சுற்றமெங்கும் தேடித் தேடி
சோர்ந்து போகின்றோம்.

பூமி என தன்பெயர் கொண்டு
புன்னகை செய்யும் உன் பூவுடலை
பூமாதேவியும் கண் வைத்ததேனோ!

காலனவன் உன் பாலனைக்கூட
கருதாது காவு கொண்டாலும்
காலத்தால் அழியாது உன் நினைவலைகள்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

எமது குடும்ப ஒளி விளக்கு நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் தமது பூரண ஒத்துழைப்பையும் முயற்சியையும் வழங்கி உதவிய வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கும், துயரச் செய்தி கேட்டு சகல வழிகளிலும் உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

வீரபத்திரர் கோவிலடி,
பொலிகண்டி.

(457)

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதிய நீல நிற கடவுச்சீட்டு அறிமுகம்

(கொழும்பு)

வெளிநாட்டு கடவுச்சீட்டு களை வழங்குவதில் அண்மைக்காலமாக நிலவும் நெருக் கடிக்கு முற்றுப்புள்ளி வைத்து புதிய நீல நிற கடவுச் சீட்டை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிமுகப்படுத் தியுள்ளது.

முந்தைய கடவுச்சீட்டானது 64 பக்கங்களைக் கொண்டிருந்தது.

குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உள்ளான புதிய கடவுச் சீட்டு இப்போது 48 பக்கங்களைக் கொண்டுள்ளது. மேலும் முந்தைய கடவுச் சீட்டுகளில் N எண்கள் இருந்த நிலையில் புதிய கடவுச்சீட்டில் P எண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் புதிய கடவுச் சீட்டின் அனைத்து பக்கங்களிலும் அழகான இலங்கையின் சிறப்பு மிக்க மற்றும் வரலாற்று சின்னங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ். நல்லூர் ஆலயம், வரலாற்று சிறப்பு மிக்க காலி ஒல்லாந்தர் கோட்டை, ஸ்ரீதலதா மாளிகை, கொழும்பின் தாமரைக் கோபுரம், சிகிரியா, ஒன்பது வளைவு பாலம், பொலநறுவையின் வரலாற்று தளங்கள் உட்பட இலங்கையின் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்கள் மற்றும் பாரம்பரிய தொழில்கள் ஆகியவை புதிய கடவுச்சீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒரு நாள் சேவையின் கீழ் 20,000 ரூபாய் கட்டணத்துடன் விண்ணப்பிப்ப வர்களுக்கு முன்னுரிமை அளித்து புதிய கடவுச் சீட்டுகளை பெற்றுக் கொள்ளலாம்.

புதிய கடவுச்சீட்டுகள் போதுமான அளவு கையிருப்பு கிடைத்துள்ளதால் எதிர்காலத்தில் கடவுச்சீட்டு வழங்குவதில் ஏற்படும் நெரிசல் குறையலாம் என குடிவரவு குடியகல்வு திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

# கம்மன்பிலவின் தேவைக்காக பதவி நீக்க முடியாது

### ஈஸ்டர் தாக்குதல் அறிக்கைக்கு பதிலளித்த விஜிதஹேரத்

(கொழும்பு)

**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**



எவ்வாறெனினும், இந்த சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கம் புதிய விசாரணைகளை மேற் கொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச் சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகியோரை தற்போதைய பதவிகளில் இருந்து எக்காரணம் கொண்டும் நீக்க அரசாங்கம் தயாராக இல்லை என்றும் கூறினார். (நி-8)

## மேலும் 3 வாகனங்களை கையளித்தார் மகிந்த



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பயன் பாட்டுக்காக வழங்கப்பட்ட 3 வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட 16 வாகனங்களில் 8 வாகனங்கள் கடந்த 19ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் கையளிக்கப் பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகப்பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது 6 அரச வாகனங்களை மாத்திரமே பயன்படுத்துவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷவின் போக்குவரத்து மற்றும் பாது காப்பு செயற்பாடுகளுக் காகவே குறித்த வாகனங்கள் பயன் படுத்தப்படுகின்றன.

அவற்றில் நோயாளர் காவு வண்டி, வான் மற்றும் கப் ரக வாகனம் என்பன நேற்றைய தினம் ஜனாதிபதி செயலகத்திடம் கையளிக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-8)

## பொதுத் தேர்தல் 8000 கண்காணிப்பாளர்கள் களத்தில்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர் தலுக்கான தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் உள்நாட்டு, வெளிநாட்டவர்கள் அடங்கலாக 8 ஆயிரம் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பில் ஈடுபட உள்ளனர்.

அத்துடன் பொதுத் தேர்தல் எதிர்வரும் 14 ஆம் திகதி இடம் பெறவுள்ளதுடன் தபால்மூல வாக் களிப்பு ஒக்டோபர் 31, நவம்பர் முதலாம் மற்றும் 4 ஆம் திகதி களில் இடம்பெற உள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

குறித்த தினங்களில் வாக் களிக்க முடியாத அனைத்து அரச ஊழியர்களுக்கும் நவம்பர் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தேர்தலில் வன்முறைச் சம்பவங்கள் அதிகமாக பதிவாகும் என்பதால் கண்காணிப்பு நடவடிக்கைகளும், பொலிஸ் பாதுகாப்பும் அனைத்து தொகுதிகளிலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை உள்நாட்டு மற்றும் சர்வதேச அமைப்புகள் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (நி-8)

## முட்டைகளைப் பதுக்கினால் சட்டநடவடிக்கை

### நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிரடி

(கொழும்பு)

முட்டைகளைப் பதுக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப் புக்களைத் துரிதப்படுத்த நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி சந்தைக்கு முட்டை விநியோகம் தடைப்பட்டாலோ அல்லது மொத்த முட்டை விநியோக நடவடிக்கை மட்டுப்படுத் தப்பட்டாலோ சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் தகவல் பிரிவின் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.

அண்மைய நாட்களில் 28 ரூபாய் முதல் 32 ரூபாய்க்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட்ட முட்டை தற்போது 40 ரூபாயாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் வில்லியம்சன் விலகல்



இந்தியாவிற்கு எதிரான 2 ஆவது டெஸ்டில் வில்லியம்சன் விளையாடமாட்டார் என்று நியூசிலாந்து கிரிக்கெட் வாரியம் நேற்று அறிவித்தது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இருஅணிகள் இடையேயான 3 டெஸ்ட் தொடரில் பெங்களூரில் நடைபெற்ற முதல் போட்டியில் நியூசிலாந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இரு அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் நாளை 24 ஆம் திகதி மராட்டிய மாநிலம் புனேயில் தொடங்குகிறது. இந்நிலையில் நியூசிலாந்து முன்னாள் கப்டன் வில்லியம்சன் இந்த டெஸ்டிலும் ஆடமாட்டார்.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது அவருக்கு காயம் ஏற்பட்டது. இதனால் பெங்களூரில்நடைபெற்றமுதல்டெஸ்டில் ஆட வில்லை.

வில்லியம்சன் 100 சதவீதம் முழு உடல் தகுதியுடன் இல்லை. அவரை நாங்கள் கண் காணித்து வருகிறோம் என்றும் 3 ஆவது டெஸ்டில் விளையாடுவ தற்கு முன்னேற்றம் காண்பார் என்றும் நியூசிலாந்து கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் நவம்பர் 1 ஆம் திகதி மும்பையில் தொடங்குகிறது. (நி-8)

## சம்பியன் பட்டம் வென்ற நியூசிலாந்து மகளிர்




2024 ஐசிசி மகளிர் ரி-20 உலகக் கிண்ணப் போட்டியில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி நியூசிலாந்து அணியானது சம்பியன் ஆனது.

டுபாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 158 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் 159 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெத்தாடிய தென்னாபிரிக்க அணியால் 20 ஓவர்களில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்த நிலையில் 126 ஓட்டங்களை மாத்திரம் பெற முடிந்தது. இதன் மூலம் நியூசிலாந்து 32 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

ஆண்களுக்கான ரி-20 உலகக் கிண்ணப் போட்டியைத் தொடர்ந்து மகளிர் ரி-20 உலகக் கிண்ணத்திலும் தென்னாபிரிக்கா அணி தோல்வியைத் தழுவி இருப்பது ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3246


**விக்னேஷ்**





**சதுர்த்தீஸ்வரன்**




**கபிநஜா**




**பவிதன்**




**தினேஷ்**




**டஜனா**

நாரதர் எல்லா வீட்டிற்கும் போக முடியாது..

அதனால் தான் கடவுள் சொந்தகாரர்களை படைத்துள்ளார்!!!

Thank You

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைக்கான பிரேரணை; சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணிப்பு



(கொழும்பு)

**மாகாண சபைப் பொறிமுறையை நெறிப்படுத்துவதற்கான பிரேரணையைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாகாண ஆளுநர்களுக்கு அறிவித்துள்ளார்**

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் மாகாண ஆளுநர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதன்படி மாகாண சபைகளின் கீழ் உள்ள சுகாதார மற்றும் கல்விச் சேவைகளில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு சாதகமான தீர்வுகளை வழங்கத் தீர்மானிக்கப் பட்டது.

தற்போதைய நிலைமாறு காலத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை இலகுபடுத்தும் வகையில் சிறந்த சேவையை வழங்க மாகாண சபைகள் செயற்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கையை இலகுவாக்கும் வகையில் மாகாண சபைகளினால் சாத்தியமான அனைத்து பொருளாதார மற்றும் சமூக தலையீடுகளையும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மாகாண ஆளுநர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

புதிய அரசியல் கலாசாரத்தை ஆரம்பிப்பதற்கு கிடைத்த ஆணையை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, மக்களின் நம்பிக்கையை குலைக்காத செயற்பாடுகள் குறித்தும் வலியுறுத்தினார்.

இதன்போது வடக்கு, கிழக்கு காணிகள் மற்றும் மாகாண சபை நிதியின் பயன்பாடு தொடர்பிலும் நீண்ட கலந் துரையாடல் இடம்பெற்றதுடன் கந்தளாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட காணி தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இதில் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன, கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர, ஊவா மாகாண ஆளுநர் கபில ஜயசேகர, தென் மாகாண ஆளுநர் பந்துல ஹரிச்சந்திர, மத்திய மாகாண ஆளுநர் சரத் பண்டார சமரசிங்க அபயகோன், வடமத்திய மாகாண ஆளுநர் வசந்தா குமாரா ஆகியோர் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# எதிர்காலத்தை கட்டியெழுப்ப இலங்கைக்கு ஆதரவு

## மீண்டும் அறிவித்த ஐ.எம்.எப்



(வோஷிங்டன்)

சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு இலங்கைக்கு ஆதரவளிக்க அர்ப்பணிப்புடன் இருப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாட்டில் பங்குபற்றும் இலங்கையின் பிரதிநிதிகளுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவிற்கும் இடையிலான சந்திப்பொன்று வோஷிங்டனில் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் மகிந்த சமரசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து கிறிஸ்டலினா ஜோர்ஜீயேவா தமது எக்ஸ் தளத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# பொலிஸார் தொடர்பில் முறையிட 1997

(கொழும்பு)

பொலிஸார் தொடர்பில் ஏதேனும் முறைகேடு அல்லது மோசடி நடந்தால் அது குறித்து தெரிவிக்க பொதுமக்களுக்காக பொலிஸார் அவசர தொலைபேசி எண்ணை அறிமுகப் படுத்தியுள்ளனர்.

இதன்படி, 1997 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அறிவிக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபர் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (நி-8)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 0091956156719

WESTERN UNION WU MoneyGram Ria

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

077 839 3974


# இராசிபலன்

23.10.2024
ஐப்பசி 06, புதன்கிழமை
சஷ்டி முற்பகல் 7.28 மணிவரை
திருவாதிரை முற்பகல் 11.50 மணிவரை
சுபநேரம் -4.32-6.02 மணிவரை
இராகுகாலம் -12.02-1.32 மணிவரை
சந்திராஷ்டமம்.
விசாகம், அனுசம்.

வளவன்




செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடன் பிறப்புகள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.




எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தூரத்து உறவினர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.




காரிய வெற்றிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பயணங்கள் கைகூடும், ஆன்றோர்களின் சந்திப்புண்டு.




உற்சாகத்தோடு செயற்படும் நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், கடன் பிரச்சினைகள் தீரும் வாய்ப்புண்டு.




வாக்குமேன்மையுண்டு, நிதிநிலை உயரும் நாள், அலங்காரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




பொது வாழ்வில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும்.




விரயங்கள் மேலோங்கும் நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், பொது வாழ்வில் சில கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.




வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.




அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வரலாம், கனவுப் பலிதமுண்டு, கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், செய்தொழிலில் மேன்மையும், உயர்வும் கிடைக்கும்.




குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், உடல் நலன் சீராகும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

**பணிவோடு பேசுபவனை பயந்தாங்கொள்ளி என்று நினைப்பவன் படுமுட்டாள்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நுளம்பு கட்டுப்பாட்டு வாரம்

## நாளை முதல் 26 வரை

(கொழும்பு)


விசேட நுளம்புக் கட்டுப்பாட்டு வார நிகழ்வு நாளை வியாழக்கிழமை முதல் 26 ஆம் திகதி வரை மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

24,25,26 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இந்த விசேட நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புகள் வழங்கி தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்களின் சுற்றுச் சூழலை துப்பரவாக பேணுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

24.10.2024 வியாழக்கிழமை வண்ணார் பண்ணை J/97, 25.10.2024 வெள்ளிக்கிழமை நாவாந்துறை J/87, 26.10.2024 சனிக்கிழமை கொழும்புத்துறை J/62.



யாழ்/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முத்தமிழ் விழா கடந்த செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்றது. கல்லூரி அதிபர் து.திலீப்குமார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்ததுடன் அவருக்கு "முத்தமிழ்வேந்தர்" எனும் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## வரணி முன்பள்ளியில் மரநடுகை நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வரணி இயற்றாலை ரட்ணா முன்பள்ளியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மரநடுகை நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இன்பக்கரம் அறக்கட்டளை அமைப்பினூடாக முன்பள்ளியை அழகுபடுத்துதலும் மரநடுகையும் என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுத் தலைவர் தெ.மிகுந்தன் தலைமையில் முன் பள்ளியில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சிதம்பரப்பிள்ளை பிரபாகரன், வரணிப் பிரதேச சுகாதாரப் பரிசோதகர் தெய்வேந்திரம் கலைவாசன், முன்பள்ளியின் பழைய மாணவரும் ஆயுள் வேத வைத்தியருமான விநாயகமூர்த்தி மிராஜ் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்திருந்தனர்.மேலும் இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-8-30)



தென்மராட்சி-கைதடி சிறுவர் பூங்காவின் சிறுவர் தின நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு கைதடி சிறுவர் பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

கைதடி சிறுவர் பூங்காவின் பாவனையாளர்களின் ஏற்பாட்டில் கா.நிதுஸ்கா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி நிருபராணி அமிர்தலிங்கம் கலந்து சிறப்பித்திருந்தார். (படம்-சுபேசன்)

## மழைநீரால் நிரம்பிய வயல்கள்

(கரணவாய்)

கடும் மழை காரணமாக வடமராட்சிப் பகுதியில் உள்ள நெல்வயல்களில் மழை நீர் நிரம்பிக் காணப்படுவதால் நெல் விதைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் விதைக்கப்பட்ட நெற்கள் எல்லாம் மழை நீரினால் அழிவடைந்து விட்டதாகவும், இதனால் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட நெல் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (நி-8-60)

# வீதிச் சமிக்ஞைகளை மோதித்தள்ளிய 'கப்'

(தருமபுரம்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கப்ரக வாகனம் வீதிச் சமிக்ஞைகளை மோதித்தள்ளி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்துச் சம்பவம் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தர்மக்கேணிப் பகுதியில் நேற்று இடம் பெற்றது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கப்ரக வாகனம் சாரதியின் நித்திரைக் கலக்கம் காரணமாக வீதியில் பொருத்தப்பட்டிருந்த வீதி சமிக்ஞைகளை மோதித் தள்ளி பலத்த சேதத்துக்கு உள்ளானதுடன் வாகன சாரதி மயிரிழையில் உயிர் தப்பினார்.

இவ்விபத்துத் தொடர்பாக பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8-315)

# தேர்தல்களம்

# முயற்சி செய்தால் முடியாதது ஒன்றுமில்லை

## ஊசி சின்னத்தில் போட்டியிடும் மருத்துவர் அர்ச்சுனா



(யாழ்ப்பாணம்)

வாழ்வாதாரங்களையும் கல்வியையும் அடிப்படை வசதிகளையும் மக்களுக்கு வழங்க ஊழலற்ற நேர்மையான அமைப்பு ஒன்று தேவையாக உள்ளது. முயற்சி செய்தால் முடியாதது என்று ஒன்றுமில்லை என மருத்துவர் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

ஊசி சின்னத்தில் சுயேட்சைக்குழு 17 இல் போட்டி யிடும் மருத்துவர் அர்ச்சுனா தனது முகநூலில் இவ்வாறு பதிவிட்டுள்ளார். அவர் மேலும் பதிவிட்டுள்ளதாவது, மாற்றம் என்பது அடிமட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். ஏழைகளை ஏழைகளாகவும் பணக்காரர்களை பணக்கார முதலைகளாகவும் ஆக்காமல் அடிமட்டத்தில் நெம்பு கோலை கொடுத்து கிளப்பிவிட்டால் நிச்சயம் எம் சமுதாயம் மேலெழும்.

நாம் மேலெழுந்தால் வெளிநாட்டிற்கு ஓட வேண்டிய தேவை ஏற்படாது. போரின் தாக்கங்களால் பல அடிகள் பின்னால் நிற்கிறோம்.நிச்சயமாக பெரியதோர் மாற்றம் வட-கிழக்கில் ஏற்படும். ஊசிக்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்து, முயற்சி செய்யுங்கள் என அவர் பதிவிட்டுள்ளார். (நி-8)

# தமிழர்களை அழித்துத் தான் தமிழ்தேசியத்தை அடைய வேண்டுமா?

## அங்கஜன் கேள்வி



கடந்த நான்கு வருடங்கள் மக்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்திற்கு சென்று மக்களுக்காக எதையுமே செய்யாமல் மறுபடியும் வாக்குக் கேட்டு வருபவர்களிடம் மக்கள் கேள்வி கேட்க வேண்டும் என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும் -ஜனநாயக தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த சிலர் அடுத்த 5வருடங்களில் இவற்றையெல்லாம் செய்வோம் என மக்களை ஏமாற்றி வருகின்றனர்.அவர்களிடம் கேளுங்கள் கடந்த நான்கு வருடங்கள் எமக்காக என்ன செய்தீர்கள் என்று.அவர்கள் கட்டிய வேட்டி கசங்காமல் மறுபடியும் உங்களிடம் வாக்குக் கேட்க வருவார்கள்.

எனவே மக்கள் இம்முறை தேடலுடனும், தெளிவுடனும் வாக்களிக்க வேண்டும். அப்போது தான் அடுத்த தலைமுறையாவது தலைநிமிர்ந்து வாழும்.தற்போது யாழ்ப்பாணத்தில் சனத்தொகை விகிதம் குறைந்து செல்கிறது. ஒன்பதில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர் தொகை ஆறாகக் குறைந்துள்ளது. இதற்கெல்லாம் காரணம் யார்?

தமிழ் மக்களை அழித்துத் தான் தமிழ்த் தேசியத்தை அடைய வேண்டுமா? தீர்வு கிடைத்த பின்னர் தான் மக்களை வாழ வைக்க முடியும் என்பது அவர்களுடைய வாதமாக காணப்படுகின்றது.தமிழ் மக்கள் வாழ்ந்தால் தான் தமிழ்த் தேசியத்தை வாழ வைக்க முடியும்.

பொருளாதார மேம்பாடுகளை எம் பிரதேசத்தில் மேற்கொள்ளாமல் இளைய தலைமுறைகளை புலம் பெயரச் செய்து விட்டு தமிழ்த் தேசியத்தை எடுத்து அதை அனுபவிப்பது யார் என மேலும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார். (நி-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க அறிவித்தல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
## நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2025

மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் சார்பில் யாழ் மாவட்ட செயலக திணைக்களப் பெறுகைக் குழுவினால் யாழ் மாவட்ட செயலகம் மற்றும் யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2025ஆம் ஆண்டில், கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வதற்கும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் வடபிராந்தியத்திலுள்ள நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட செயலக பெறுகை அலகு (அறை இல: 42) மற்றும் பிரதேச செயலகங்களில் **2024-10-24** ஆம் திகதி தொடக்கம் 2024-11-30ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் அல்லது **www.jaffna.dist.gov.lk** என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை **2024-11-30** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"நிர்மாண தாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025"** எனக் குறிப்பிட்டு **"அரசாங்க அதிபர், பெறுகை அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் பெறுகை அலகில் (அறை இல:42) சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கமையவும், ஏனைய வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்கு ரூபா 500/= இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள **7041946** எனும் இலங்கை வங்கி கணக்கிலக்கத்திற்கு வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக் கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டையை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்களும் 2024-11-30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| ஒப்பந்த தொகை | பதிவுக் கட்டணம் |
|---|---|
| ரூபா 2,000,000 இற்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2,000 |
| ரூபா 2, 000,000 இற்கு அதிகமானதும் ரூபா 5,000,000 இற்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 3,000 |
| ரூபா 5, 000,000 இற்கு அதிகமானதும் ரூபா 10,000,000 இற்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 5,000 |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(C-1434)

## பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளின் தொகுதி விபரம்

**பொருட்கள்**

- காகிதாதிகள், எழுதுகருவிகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள்.
- கணினிகள், அச்சிடும் உபகரணங்கள், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்.
- அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் பிளாஸ்ரிக் பெயர் பலகைகள், மற்றும் அலுவலக அடையாள அட்டைகள்.
- இலத்திரனியல் மின்சாரப் பொருட்கள் மற்றும் மின் உபகரணங்கள்.
- இயந்திரங்களும் அதன் உதிரிப்பாகங்களும்.
- வாகன உதிரிப்பாகம்
- விளையாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள்
- காலை, மதிய, இரவு, உணவு மற்றும் சிற்றுண்டி வகைகள்.
- சுத்திகரிப்பு பொருட்கள்
- அழகு சாதனப் பொருட்கள், பிளாஸ்ரிக், தோல் உற்பத்திகள் மற்றும் சமையல் உபகரணங்கள்
- கட்டிட நிர்மாண மற்றும் திருத்த வேலைகளுக்கான மூலப்பொருட்கள்
- துணி வகைகள்
- தளபாடங்கள்
- விவசாயப் பொருட்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள்.
- மீன் பிடி உபகரணங்கள்
- மருந்து உபகரணங்கள்
- சூரிய மின்கலம், உதிரிப்பாகங்கள் மற்றும் திருத்தங்கள்
- நீர் சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள்

**வேலைகள்**

- கட்டிடங்கள்,
- வீதிகள்
- பாலங்கள்

**சேவைகள்**

- சுத்திகரிப்பு சேவை
- பாதுகாப்பு சேவை
- பந்தல் மற்றும் அலங்காரம், ஒலி, ஒளி சேவை
- படப்பிடிப்பு சேவை
- குளிரூட்டிகள், வளிபதனாக்கிகள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- போட்டோ பிரதி இயந்திரங்கள், கணினி இயந்திரங்கள், கணினி அச்சியந்திரங்கள், கணினி வலையமைப்பு முறைமை, உள்ளக தொலைபேசி அமைப்பு, CCTV திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- வாடகைக்கு மற்றும் குத்தகைக்கு வாகனம் வழங்கல்
- இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள், உதிரிப்பாகங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- வாகனம் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- தளபாடங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- ஏனைய சேவைகள்

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாவட்டச் செயலாளருக்காக மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(C-1434)

# உரமானியத்திற்கான பணம் வைப்பிலிடப்பட்டது-விவசாய அமைச்சர்

(கொழும்பு)

நாட்டின் 11 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளின் கணக்கில் உரமானியத்துக்கான பணம் வைப்பில் இடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு விவசாயிக்கு 15,000 ரூபா வங்கிக் கணக்கில் வைப்பில் இடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் எம். பி. என். எம். விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையில் 11 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளின் கணக்கில் 60 மில்லியன் ரூபாய் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

## பொது அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

எமது சபைக்குச் சொந்தமான, தாவடி J/194 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள மயான வீதியின் 3 ஆம் ஒழுங்கைக்கு உழவர் வீதியென பெயர்சூட்டுமாறு அப்பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் எமது சபையை கோரியுள்ளனர். விபரங்கள் வருமாறு

**ஆதன இடாப்பின் பிரகாரம் தற்போது பாவனையிலுள்ள பெயர்:-** மயான வீதியின் 3 ஆம் ஒழுங்கை.

**சூட்டப்படவுள்ள பெயர்:-** உழவர் வீதி, நீளம்:-380 மீற்றர், அகலம்:- 4 மீற்றர்,

**வீதியின் ஆரம்பம்:-** வன்னிய சிங்கம் வீதி. **வீதியின் முடிவு:-** மயான வீதி.

எனவே இவ்வீதி பெயர் தொடர்பில் ஆட்சேபனை ஏதும் இருப்பின் எதிர்வரும் 04/11/2024 ஆம் திகதிக்குள் செயலாளர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு எழுத்து முலம் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**சாரதா உருத்திரசம்பவன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

**22/10/2024**

(C-1433)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: சதயம்
10 இல் சூரி செவ்
கி.பா: 16 3/4
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: HRM,HR Officer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14867

பிறப்பு:1996 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா:14
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BSc, Software Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14868

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
8 இல் செவ்
கி.பா: 81
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: BBA, Manager (UK)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14869

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/14851

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14844

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
7 இல் செவ்
கி.பா: 43 3/4
உயரம் :5'6"
தகைமை/தொழில்: Engineer (new zealand)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/14826

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய விமானங்கள் தாக்கப்ப

# காலிஸ்தான் தீவிரவாதி எச்சரிக்

(டில்லி)

**நவம்பர் 1 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை ஏர் இந்தியா விமானங்களில் பயணிக்க வேண்டாம் என காலிஸ்தான் பிரிவினைவாத தீவிரவாதி குர்பத்வந்த் பன்னுன் நேற்று புதிய எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.**



சீக்கிய இனப்படுகொலையின் 40 ஆவது ஆண்டு நினைவு ஆண்டை முன்னிட்டு ஏர் இந்தியா விமானங்கள் தாக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் கனடாவில் இரட்டைக் குடியுரிமை வைத்துள்ள சீக்கியர்களுக்கான நீதி என்ற அமைப்பின் நிறுவனரான பன்னுன் கடந்த ஆண்டும் இதே நேரத்தில் இப்படியான எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதேவேளை முன்னதாக கடந்த சில நாட்களாக இந்தியாவின் பல்வேறு விமான நிறுவனங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்களும் வந்திருந்தன

சீக்கியர்களுக்கு தனி இறையாண்மை கொண்ட நாடு வேண்டும் என்று கோரி வரும் எஸ்எஃப்ஜெ என்ற அமைப்பை வழிநடத்தி வரும் குர்பத்வந்த் பன்னுன், தேசத்துரோகம் மற்றும் பிரிவினைவாத குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2020 ஆம் ஆண்டு உள்துறை அமைச்சகத்தால் தீவிரவாதியாக அறி

# கட்டிப்பிடிக்க கட்டுப்பாடு




(வெலிங்டன்)

அன்பானவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது அவர்களை ஆரத்தழுவி வழியனுப்பி பிரியாவிடை கொடுப்பது வழக்கம்.

அப்போது மனித உணர்ச்சிகள் தவழும் இடமாக விமான நிலையங்கள் இருக்கும்.

இந்தநிலையில் நியூசிலாந்து விமான நிலையத்தில் கட்டிப்பிடிக்க கட்டுப்பாடு போடப்பட்டுள்ளது. அங்குள்ள அறிவிப்பு போஸ்டரில் "கட்டி தழுவுவதற்கான நேரம் அதிகப்பட்சம் 3 நிமிடங்கள். நீண்டநேர பிரியா விடைகளுக்கு கார் நிறுத்தத்தை பயன்படுத்தவும்" என அச்சிடப்பட்டுள்ளது.

இந்த வாசகம் பயணிகளிடையே கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. மனிதாபிமானமற்ற செயல் என கருத்து தெரிவித்து இதனை இணையத்தில் வைரலாக்கி வருகிறார்கள்.

காலதாமதம் உள்ளிட்ட பிரச்சினைகளை தவிர்க்கும் வகையில் பயணிகளின் நலன் கருதியே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய நிர்வாகத்தினர் இதற்கு விளக்கம் கொடுத்துள்ளனர். (நி-8)

# இந்திய- சீன எல்லையில் கட்டுப்பாட்டுக்கோடு

(டில்லி)

கிழக்கு லடாக்கில் உள்ள உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டில் ரோந்து ஏற்பாடுகள் குறித்து இந்தியாவும் சீனாவும் ஒரு உடன்பாட்டை எட்டியுள்ளன.

இருநாடுகளின் அதிகாரிகளுக்கு இடையேயான அண்மைய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து இந்த உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளதாக இந்திய விவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி இந்த தகவலை நேற்று முன்தினம் அறிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் பங்கேற்கும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்கு முன்னதாக இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்காக பிரதமர் மோடி ரஷ்யாவுக்கு வருகை தருவதற்கு முன்னதாக சிறப்பு செய்தியாளர் சந்திப்பில் பேசிய வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி,

சீன அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையின் விளைவாக இந்தியா - சீனா எல்லைப் பகுதிகளில் உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு வழியாக ரோந்து ஏற்பாடுகள் குறித்து உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என்றார்.

கிழக்கு லடாக் எல்லையில் 2020 ஆம் ஆண்டு ஏற்பட்ட மோதலில் இருந்து இரு அண்டை நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பதற்றமாக உள்ளன.

இந்த மோதலின் விளைவாக 20 இந்திய இராணுவத்தினர் உயிரிழந்தும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



# அணு ஏவுகணை

## இந்தியாவின் 4 ஆ



(டில்லி)

இந்தியா தனது எதிரிகளுக்கு எதிரான அணுசக்தி தடுப்பை வலுப்படுத்த இந்த வாரம் விசாகப்பட்டினத்தில் உள்ள கப்பல் கட்டுமான மையத்தில் (எஸ்.பி.சி.) 4 ஆவது அணுசக்தி ஏவுகணை (எஸ்.எஸ்.பி.என்.) நீர்மூழ்கிக் கப்பலை அமைதியாக ஏவியுள்ளது.

கனடாவுடனான மோதல்களுக்கு மத்தியில் இந்தியா தனது அணுசக்தி தடுப்பை வலுப்படுத்தியுள்ளது.


அக்டோபர் 9 ஆம் திகதி பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு இந்திய-பசிபிக் பகுதியில் எதிரிகளை தடுக்கும் வகையில் 2 அணுசக்தியால் இயங்கும் தாக்குதல் நீர்மூழ்கிக் கப்பல்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு

...படும் ...ரிக்கை!



...மச் ...றி விக்கப்பட்டிருந்தமையும் குறிப்பி டத்தக்கது. (நி-8)

## 500 மில்லியன் அமெரிக்க டொலருடன்


# ஹிஸ்புல்லாவின் பதுங்கு குழியை கண்டுபிடித்த இஸ்ரேல் இராணுவம்

(காசா)

பெய்ரூட்டில் மிகப் பெரிய அளவில் நிதியை பதுக்கி வைத்திருந்த ஹிஸ்புல்லாவின் இரகசிய பதுங்கு குழியை கண்டு பிடித்துள்ளோம் என இஸ் ரேல் இராணுவம் தெரி வித்துள்ளது.

அந்த பதுங்கு குழி யில் பணம், தங்கம் என மொத்தமாக சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர் அளவிற்கு நிதி இருப்பதாக தெரிவித்துள் ளது.

முக்கியமான மருத்து வமனையின் கீழ் உள்ள இரகசிய பதுங்கு குழி யில் 4 கோடி ரூபாய்




மதிப்பிலான நிதி உள் ளது.

ஹிஸ்புல்லா அமைப் பினர் பணம் மற்றும் தங் கம் வைத்துள்ள பதுங்கு குழியில் தாக்குதல் நடத்த வில்லை.


இது ஹசன் நசர்ல் லாவின் பதுங்கு குழியா கும். இது பெய்ரூட்டின் இதயம் எனக் சொல் லக்கூடிய முக்கியமான அல்-சஹல் மருத்துவ மனையின் நேர் கீழாக உள்ளது.

ஹிஸ்புல்லா அமைப் பினரை குறிவைத்து இஸ் ரேல் இராணுவம் லெப னானில் தாக்குதல் நடத்தி வருகிறது.

முதலில் ஹிஸ்புல்லா அமைப்பினரின் நிலை களை குறிவைத்து தாக் குதல் நடத்தியது.

தற்போது ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு உதவி வரும் நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட நிதி தொடர் பான நிலைகளை குறி வைத்து தாக்குதல் நடத்தி வருகிறமை குறிப்பிடத் தக்கது. (நி-8)

## ...ணை நீர்மூழ்கி ...4 ஆவது தயாரிப்பு



உருவாக்குவதற்கான இந்திய கடற்படையின் திட்டங்களை அனுமதித்தது.

சீனா போன்ற பலம் வாய்ந்த எதிரி நாடுகளுக்கு எதிராக கடல் அடிப்படையிலான அணு ஏவுகணைகளை தடுப்பதில் மோடி அரசு கவனம் செலுத்து கிறது.

எனவே அணுசக்தி தாக்குதல் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணை நீர்மூழ்கி கப்பல்களுக்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது.

நீர்மூழ்கி கப்பலின் 6ஆவது ஐ.என்.எஸ். வாக்ஷிர் இந்த ஆண்டு டிசம்பரில் இயக்கப் படவுள்ளதால் வழக்கமான நீர் மூழ்கி கப்பல் தடுப்பு நடவடிக் கைகளையும் அரசு முடுக்கி விட்டுள்ளது. (நி-8)

## செயற்கை சூரிய கிரகணம் உருவாக்கும் 'புரோபா -3'

(டில்லி)

செயற்கை சூரிய கிரக ணத்தை உருவாக்கும் 'புரோபா-3' செயற்கைக் கோளை நவம்பர் 29 ஆம் திகதி விண்ணில் ஏவ இஸ்ரோ திட்டமிட் டுள்ளது.

ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறு வனத்துடன் (இஸ்ரோ) இணைந்து, விண்வெளி யில் செயற்கை சூரிய கிரக ணத்தை உருவாக்க, 'புரோபா-3' என்ற இரட்டை செயற்கைக் கோளை வடி வமைத்து உள்ளது.

விண்ணில் இருந்து புகைப்படங்களை எடுத்து பூமிக்கு அனுப்பும் வகை யில் இந்த இரட்டை செயற் கைக்கோள் வடிவமைக் கப்பட்டுள்ளது.

தற்போது, 'புரோபா-3' செயற்கைக்கோள் இறு திக்கட்ட சோதனையில் உள்ளது.


ஆந்திரா மாநிலம் ஸ்ரீ ஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திற்கு நேற்று முன்தினம் அந்த செயற்கைக் கோள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சற்று வித்தியாசமான சுற்றுப்பாதையில் இந்த செயற்கைக்கோள் செலுத் தப்படவுள்ளமை குறிப்பி டத்தக்கது. (நி-8)



## வானொலிக்கோபுரத்துடன் ஹெலி மோதி விபத்து

### நால்வர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்கா டெக்ஸாஸ் மாநிலத்தின் ஹியூஸ்டன் பகுதியில் அமைந்துள்ள வானொலிக் கோபுரத்தின் மீது ஹெலிகொப்டர் மோதி விபத்துக்குள்ளாகியுள் ளது.

இந்த விபத்தில் ஹெலி கொப்டர் தீக்கிரையானது டன் அதில் பயணித்த நான்குபேர் உயிரிழந்துள் ளதாக அமெரிக்க ஊடகங் கள் செய்தி வெளியிட் டுள்ளன.

இந்த சம்பவம் அந் நாட்டு நேரப்படி கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

வானொலிக் கோபுரத் தின் உச்சியில் உள்ள பாதுகாப்பு சமிக்ஞையின் விளக்குகள் செயலிழந்த காரணத்தினால் 600 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த குறித்த ஹெலிகொப்டர் அதனு டன் மோதியதாக ஆரம்பக் கட்ட விசாரணைகள் தெரி விக்கின்றன. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,30,000 சட்டவிரோத சுவரொட்டிகள் அகற்றம்

## பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

**பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக சட்டவிரோதமாக காட்சிப்படுத்தப்பட்டிருந்த 1,30,000 சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் அகற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இதுவரையில் 439 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதன்படி தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 427 முறைப்பாடுகளும் 2 வன்முறைச் சம்பவங்களும் ஏனைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 10 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 162 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 277 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. (நி-8)

### தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு

# புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர் மற்றும் ஆணைய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனங்களுக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன்படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் புதிய தலைவராக கலாநிதி பாண்டுர திலீப விதாரண நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 220 | 200 | 280 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 300 |
| தக்காளி | 350 | 250 | 380 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 220 | 150 |
| கோவா | 300 | 220 | 250 | 250 |
| கரட் | 180 | 200 | 200 | 200 |
| பூசணி | 260 | 60 | 100 | 100 |
| புடோல் | 80 | 150 | 120 | 250 |
| வாழைக்காய் | 180 | 130 | 250 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 280 | 220 | 350 | 350 |
| பாகற்காய் | 600 | 500 | 600 | 400 |
| வெண்டக்காய் | 200 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 | 200 |
| பயற்றங்காய் | 450 | 250 | 200 | 300 |
| லீக்ஸ் | 200 | 300 | 300 | 350 |
| பீற்றூட் | 120 | 120 | 170 | 200 |
| கறிமிளகாய் | 700 | 550 | 650 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 150 | 250 | 200 |
| போஞ்சி | 350 | 450 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 220 | 150 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 150 | 150 |
| தேசிக்காய் | 400 | 350 | 500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 160 | 140 | 120-170 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 450 | 450 | 480 |
| முள்ளங்கி | 80 | 140 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 150 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 100 |

## இன்று ஒரு தகவல் 248



தென்கச்சி. கோ. சுவாமிநாதன்

# சாமர்த்தியம்

யாரையும் ஏமாற்றவும் கூடாது ஏமாந்து போகவும் கூடாது. அதற்கு மிகவும் சாமர்த்தியம் வேண்டும்.

ஒரு ஊரிலே ஒரு பெரிய வீணை வித்துவான் இருந்தார். உண்மையிலேயே வீணை வாசிப்பதில் மிகவும் கெட்டிக்காரர்.

அவருடைய வீணை வாசிப்பை கேட்டுவிட்டு ஒரு பெரிய மகாராஜா என்ன செய்தார் தெரியுமா? ஆள் உயரத்திற்கு ஒரு வீணையைத் தயார் செய்து அதை அந்த வித்துவானுக்குப் பரிசாகக் கொடுத்துவிட்டார்.

அதன் பின்பு அந்த வித்துவான் எந்த ஊருக்குப் போனாலும் அந்தப் பெரிய வீணையை எடுத்துக் கொண்டு போய்த்தான் வாசிப்பார். அவர் காலத்திலே அவர்தான் வீணை வாசிப்பதில் முதலிடம்.

அதே போல் இன்னொரு வித்துவான் இருந்தார். அவர் கடம் வாசிப்பதில் முதலிடத்தில் இருந்தார். இப்படி இவர்கள் இரண்டு பேரும் அவரவர் தொழிலிலே முதலிடத்திலே இருந்தார்கள். இருந்தாலும் அவர்கள் இரண்டு பேருக்குள்ளே ஏதோ மனஸ்தாபம்.

இவர் போகும் கச்சேரிக்கு அவர் போவதில்லை. அவர் போகும் கச்சேரிக்கு இவர் போவதில்லை.

இவர்கள் இரண்டு பேரையும் எப்படியாவது ஒரே மேடையிலே வாசிக்க வைத்து கேட்க வேண்டும் என்பது மக்களுடைய விருப்பம். இருந்தாலும் அது நடக்காத காரியமாகவே இருந்தது. இரண்டு துருவமாக இருக்கிறவர்களை எப்படி ஒன்று சேர்க்க முடியும்?

ஒரு கிராமத்துப் பண்ணையார் இருந்தார். பெரிய தற்பெருமைக்காரர். இருந்தாலும் கௌரவத்திற்கு ஆசைப்பட்டவர். அவர் வீட்டிலே ஒரு திருமணம் வந்தது. அவர் மகளுக்கு திருமணம்.

இந்தத் திருமணக் கச்சேரிக்கு எப்படியாவது அந்த இரண்டு பெரிய வித்துவான்களையும் கொண்டு வர வேண்டும் என்று நினைத்தார்.

ஆனால் இவர் வருகின்றார் என்றால் அவர் வரமாட்டார். அவர் வருகின்றார் என்றால் இவர் வரமாட்டாரே! என்ன செய்வது என்று யோசித்தார்.

சரி இவர் வருகின்றார் என்கின்ற விடயத்தை அவரிடம் சொல்லவேண்டாம். அவர் வருகின்றார் என்கின்ற விடயத்தை இவரிடம் சொல்ல வேண்டாம். இரண்டு பேரிடமும் பொய் சொல்லி அழைத்துக் கொண்டு வந்துவிடுவோம்.

கச்சேரி சமயத்திலே திடீர் என்று மேடையிலே ஏற்றிவிடுவோம். மேடையிலே ஏறியதன்பின் எல்லோருக்கும் முன்னாலே சண்டைபோட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள் என்று ஒரு முடிவுக்கு வந்தார்.

அதே மாதிரி ஏற்பாடு செய்துவிட்டார். அந்த வீணை வித்துவானையும் கட வித்துவானையும் தனித்தனியாக ஒருத்தர் வந்திருப்பது இன்னொருத்தருக்குத் தெரியாமல் அழைத்துக்கொண்டு வந்து இரண்டு தனித்தனி வீடுகளிலே தங்கவைத்துவிட்டார்.

அன்றைக்கு மாலை கச்சேரி. இவர்கள் காலையிலே வந்து தங்கிவிட்டார்கள். ஆனால் அவர்கள் வந்து சேர்ந்த கொஞ்ச நேரத்தில் உண்மையிலேயே நடந்திருப்பது என்ன என்பது அரசல் புரசலாக அவர்கள் இரண்டு பேருக்குமே தெரிய ஆரம்பித்துவிட்டது.

ஊரிலே அதற்கென்றே சில பேர் இருப்பார்கள். ஒருவருக்கு ஒருவர் பத்தவைப்பதற்கு என்று.

வீணை வித்துவான் யோசித்துப் பார்த்தார். கடவித்துவானை எப்படி கட் பண்றது என்று.

உடனே அந்த பண்ணையாரைப் பார்த்தார். இதோ பாருங்கள் அந்த கட வித்துவானுடன் நான் வாசிப்பதிலே எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. இருந்தாலும் ஒரு விடயத்தை உங்களிடம் சொல்லவேண்டியது என்னுடைய கடமை.

அவர் எத்தனை கடம் கொண்டு வந்திருக்கின்றார் கவனித்தீர்களா? என்றார். கவனித்தேன் இரண்டு கொண்டு வந்திருக்கின்றார் என்றார் இவர்.

அது எதற்கு என்றால் ஒரு கடம் உடைந்து விட்டால் இன்னொன்றை உபயோகப்படுத்துவதற்கு. ஒரு சுப காரியத்திலே மேடையிலே பானை உடைந்து விட்டால் அது நன்றாக இருக்குமா? யோசித்துப் பாருங்கள் என்றார்.

நீங்கள் சொல்வது நியாயம் தான் எங்கள் கச்சேரியிலே கடமே வேண்டாம். அந்த ஆளுக்கு பேசிய பணத்தைக் கொடுத்து திருப்பி அனுப்பிவிடுகின்றேன் என்று சொல்லிவிட்டு நேராக அவரிடம் போனார். பணத்தைக் கொடுத்து கணக்கு தீர்த்து விடயத்தைச்சொன்னார்.

உடனே கடவித்துவான் இந்த பண்ணையாரைப்பார்த்து நீங்கள் சொல்வது சரி இருந்தாலும் நானும் ஒரு விடயத்தை உங்களிடம் சொல்ல வேண்டியது எனது கடமை என்றார். என்னங்க அது என்றார் இவர். அந்த வீணை வித்துவானுடைய வீணை ஆள் உயரத்தில் உள்ளது. அதை அவர் மட்டும் தூக்க முடியாது. அந்த வீணை மேலே பட்டுத்துணி போர்த்தி முன் பக்கம். 2 பேர் பின் பக்கம் 2 பேர். மொத்தமாக நான்கு பேர் தூக்கிக் கொண்டு மேடைக்கு வருவார்கள். அது பார்ப்பதற்கு எப்படி இருக்கும் என்று யோசித்து பாருங்கள் என்றார்.

பண்ணையார் யோசித்துப் பார்த்தார். பாடையை தூக்குகின்ற ஞாபகம் வந்தது. சுபமுகூர்த்தம் நடக்கின்ற வேலையிலே இது தேவையா என்று யோசித்து பாருங்கள் என்றார் கட வித்துவான்.

பண்ணையார் யோசித்தார் என் வீட்டு திருமணத்திற்கு கச்சேரியே வேண்டாம் என்று சொல்லிவிட்டு அவரையும் கணக்குத் தீர்த்து அனுப்பிவிட்டார்.

இந்த மூன்று பேரிலே யார் கெட்டிக்காரர் என்று நினைக்கின்றீர்கள்? ஒருவருக்கொருவர் சளைத்தவர்களில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி நிர்ணய விலையில் எந்த மாற்றமுமில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அரிசியின் நிர்ணய விலையில் எவ்வித மாற்றத்தையும் மேற்கொள்ள எதிர்பார்க்கவில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித் தார்.

ஒழுங்கமைக்கப்பட்ட விவசாயத் திட்டத்தை உருவாக்கி விவசாயிகளுக்கு அதிக நன்மைகளைப் பெறுவதற்கான நீண்ட கால வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரிசி வியாபாரிகள் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் நுகர்வுப் பொருட்களின் தற்போதைய விலை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதுடன், மக்களின் பிரதான உணவாக பயன்படுத்தப்படும் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நிர்ணய விலை அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னர் அரிசியின் விலையை மாற்றுவது நியாயமல்ல எனவும் அரிசி வியாபாரிகளிடம் ஜனாதிபதி குறிப்பிட்டார். விவசாயிகளிடம் இருந்து அரிசியை நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதற்கும் நுகர்வோருக்கு நியாயமான விலையில் அரிசியை வழங்குவதற்கும் முறையான பொறிமுறை யொன்று அவசியம் என ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். (நி-8)

---

# விவசாயக் கொள்கைகளின் ஸ்திரத்தன்மையில் நெகிழ்வு



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எமது நாட்டில் விவசாயக் கொள்கை (Agriculture policy) அந்தந்த காலத்திலிருந்த அரசாங்கங்களின் கொள்கைகளுக்காக அவ்வப்போது மாற்றமடைந்த காரணத்தினால் அதனது ஸ்திரத்தன்மையை தொடர்ந்தும் பேண முடியாதிருந்துள்ளது.

இதனது சமநிலையற்ற தன்மையினால் அது பொருளாதார ரீதியாக விவசாயப் பெருமக்களை பெருமளவில் பாதித்ததென்றால் மிகையாகாது.

இவ்வாறான சூழ்நிலையில் பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்த கொள்கைகளை எதற்காக உருவாக்கினார்கள் என்பது இப்போதும் புரியாத புதிராகவே இருக்கின்றது.

குறிப்பாக விவசாய கொள்கைகளை மாறி மாறி மாற்றியமைத்ததனால் இறுதியில் அதுவும் நாட்டினது பொருளாதார சிதைவுக்கு வழிவகுத்திருக்கின்றது.

நாட்டினது உணவுப் பாதுகாப்பினை தேசத்தின் மொத்த விவசாய உற்பத்தியில் மட்டும் பெற்றுவிட முடியாதென்பதனை நாம் கவனத்திற் கொள்ளல் வேண்டும். காலநிலை மாற்றத்தினாலும் ஏனைய இயற்கை அழிவினாலும் ஏற்படும் உணவு இழப்பினை ஈடுகட்டுவதற்கு உணவினை இறக்குமதி செய்யவேண்டிய கட்டாயம் இருப்பதனை உணராமலிருக்க முடியாது. இத்துடன் சுற்றுலாத்துறையின் விருத்திக்கும் உதவி செய்தலும் வேண்டும்.

ஆனால் நாட்டினது உணவுத் தேவையை மையப்படுத்தி விவசாய துறையின் (குறிப்பாக பயிர் மற்றும் விலங்கு உற்பத்தியுடன் மீன்பிடி உட்பட) உற்பத்தி அதிகரிக்கப்படுவதன் மூலமே நாம் எதிர்பார்த்த உணவுப் பாதுகாப்பை பெற்றிட முடியும்.

விவசாயத்தின் மூலம் மனிதனுக்கு தேவையான உணவை மட்டும் பெற்றுக் கொள்வதற்கும் மேலாக விவசாயம் சார்ந்த தொழிற்துறைக்கான உள்ளீடுகளும் விவசாயத்தின் மூலமே கிடைக்கின்றது.

குறிப்பாக நாம் பழங்களையும் மரக்கறிவகைகளையும் அப்படியேயும் இன்னும் அவற்றை பதனிட்டும் உணவாகக் கொள்கின்றோம். அதிலும் மாச்சத்துக்கள் மற்றும் புரதச்சத்துக்களைக் கொண்ட தானியப்பயிர்களான நெல், சோளம், அவரைப்பயிர்கள், கிழங்கு வகைகள் இன்னும் பலவற்றை பதனிட்டு மதிப்பேற்றஞ்செய்து உணவாகக் கொள்வது அவசியமாகின்றது.

அதன் மூலம் அறுவடைக்குப் பிந்திய இழப்பிலிருந்து மீளவும் உற்பத்தி செய்த உணவை வீண் விரயமின்றி உணவாக்கவும் முடிகின்றதல்லவா.

இதில் குறிப்பாக அரிசி மற்றும் சோளம் என்பன கால்நடைகளுக்கான தீவனம் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுவதனால் அவற்றினது தேவையும் குறிப்பாக அவற்றிலுள்ள ஊட்டச்சத்துக்களும் எமது நாட்டிலுள்ள புரத ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்திக்க உதவும்.

விவசாயத் திணைக்களத்தினது தகவலின்படி எமது நாட்டில் அரிசி சராசரி ஒருவரின் உணவுத்தேவை (உமி அகற்றப்பட்ட நெல் ) வருடத்திற்கு 107 கிலோகிராம் என்னும் அளவிலிருந்து 112.3 கிலோகிராம் என்னும் அளவிற்கு உயர்ந்திருக்கின்றது.

இதிலிருந்து எமது நாட்டில் நெல்லின் தேவை உயர்ந்திருக்கின்றது என்பது அர்த்தமாகும். அவ்வாறாயின் எமது உற்பத்தியையும் நாம் உயர்த்திக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம். 2022 ஆம் ஆண்டு எமது நெல்லுற்பத்தி 34 சதவீதம் குறைவடைந்திருக்கின்றது.

இதற்கு காரணமாக 2021 ஆம் ஆண்டு விவசாய கொள்கையில் வழமைக்கு மாறாக எடுக்கப்பட்ட முடிவு காரணமாக இருந்திருக்கின்றது. நெல்லுற்பத்தியை அதிகரிப்பதென்றால் நெற்செய்கை செய்யப்படும் விஸ்தீரணத்தின் அளவு அதிகரிக்கப்படல் வேண்டும். ஆனால் அதற்குரிய நிலத்தேவையை அதிகரிப்பது சாத்தியமற்றதால் இருக்கின்ற நெற்செய்கை விளைநிலத்தின் உற்பத்தித் திறனை (productivity) அதிகரிக்க வேண்டும்.

அவ்வாறாயின் விளைநிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதானது பாரம்பரிய நெற்செய்கையை கடைப்பிடிப்பதன் மூலம் நடைமுறைச் சாத்தியமற்றது. மாறாக புதிய விஞ்ஞான தொழிநுட்பத்தின் பயன்பாட்டை இந்தத் தருணத்தில் ஆரம்பித்தாலன்றி வேறு வழியில்லை என்றாகிவிட்டது.

இதிலொரு அம்சமாக நெல் ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்ட உயர்விளைச்சல் தரும் நெல்லினங்கள் தற்போது ஏறக்குறைய 98 சதவீதம் நெல் விளை நிலங்களில் பயிரிடப்பட்டு வருகின்றன. இதன் மூலம் உற்பத்தியினளவில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுமிருக்கின்றது. ஆனால் இது மட்டும் போதாது.

பயிர்களின் விளைச்சல் விளை நிலங்களில் உயர்வதனை தடுப்பதற்கான காரணிகளான களைகள் மற்றும் பீடைகள், நோய்கள் என்பனவும் மிகவும் முக்கிய காரணிகளாக விளங்குகின்றன.

இவை தவிர இயற்கையின் சீற்றத்தால் வெள்ளப் பெருக்கு, வறட்சி மற்றும் அதிகரித்த பனி இவையும் இவ்வாறான நோய் மற்றும் பீடைகளின் பெருக்கத்திற்கு காரணமாக இருக்கின்றன.

இவற்றை விளை நிலத்தில் முற் கூட்டியே கட்டுப்ப டுத்தினாலன்றி இவற்றின் தாக்கத்திலிருந்து இன்னும் சேதத்திலிருந்து நெற்பயி ரையோ அல்லது வேறெந்த பயிரையோ காப்பாற்றிவிட முடி யாது. அவ்வாறாயின் இவற்றுக் கான தீர்வுகளும் ஆய்வாளர் களால் முன்வைக்கப்படல் வேண்டும் அல்லவா.

விவசாயத் திணைக்களத்தின் ஆய்வுகளில் காலநிலை மாற்றமடைந்தாலும் அதனையும் தாங்கி வளரக்கூடிய குறிப்பாக வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய நெல்லினங்களான Bg 251 மற்றும் Bg 314 போன்றனவற்றை சிறந்த பயிர்ச்செய்கை முறைகளைப் பயன்படுத்தித் தவறான விவசாயக் கொள்கையினால் குறிப்பாக பயிர்ச்செய்கைக்கான அசேதன இரசாயனப் பசளைகளை இறக்குமதி செய்வதை தடுத்து சேதனவிவசாயத்தில் பயிர் செய்வதற்கு முனைந்தபோது வீழ்ச்சியடைந்த நெல்லுற்பத்தியை மீட்டெடுத்துக் கொள்ள வழிவகைகள் உண்டு.

அதிலும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் குறிப்பாக தேயிலையில் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தினால் உருவாக்கப்பட்ட அதீத வறட்சியைத் தாங்கக்கூடிய தேயிலையினமான TRI 5000 வகைகளிலுள்ள இனங்களைப் பயிரிடுவதன் மூலம் இழந்த உற்பத்தியையும் வருவாயையும் தேடிக்கொள்ள முடியும்.

பாரம்பரிய பயிரினங்களில் முற்றுமுழுதாக தங்கியிருக்காது திருந்திய கலப்பினங்களைக் கொண்ட புதியவகை பயிரினங்களை பயிரிடுவதன் மூலம் பயிர் உற்பத்தியில் எந்த விழுக்காடும் ஏற்படாமல் அறுவடை செய்வதற்கான வழிவகைகள் கைவசமிருந்தும் நாம் உற்பத்தியில் வீழ்ச்சியைக் கண்டிருக்கின்றோம்.


இது குறிப்பாக விவசாயம் சார் தொழிநுட்பங்கள் மற்றும் திருந்திய இனங்களை ஆய்வு மூலம் கண்டிருந்தும் வரப்பிரசாதமாக பெற்றிருந்தும் அசேதன இரசாயனத்தை அறவே தடை செய்த காரணத்தால் உற்பத்தியை இழந்து அதனால் பொருளாதார வீழ்ச்சிக்கும் வழிவகைகளை தேடிக் கொண்டோம்.

இது மனித தவறு என்பதற்கு அப்பால் அறிவு சார் சமூகம் சிந்தித்து பார்க்காமல் அவசரப்பட்டு செய்து கொண்ட முடிவுகளாகும். சேதன விவசாயத்தின் பால் விருப்பம் கொள்வதில் எந்தவிதத் தவறும் இல்லை ஆனால் அதனை ஓரிரவில் செய்துவிட வேண்டுமென அவசரப்பட்டதால் வந்த விபரீதமாகும்.

அசேதன இரசாயனங்களால் ஏற்படும் நோய்கள் மற்றும் சூழல் பாதிப்புக்களை தொடர்ச்சியாக கிரகித்துக் கொண்டதால் இத்தகைய மக்கள் தேகாரோக்கியம் சார்ந்து முடிவுகள் எடுக்கப்பட்டிருந்தாலும் அதனது பின்விளைவுகளையும் நாம் கலந்தாலோசித்திருந்தால் இவ்வாறான விபரீத முடிவுகளுக்குள் சிக்குப்பட்டிருக்கத் தேவையில்லை. அனைத்தும் சேர்ந்து பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு காரணமாகிவிட்டது.

இங்கே எவரையும் குறை கூறுவதனை தவிர்த்து கற்றுக் கொண்ட பாடங்களிலிருந்து இன்னொரு தடவை இப்படியொரு தவறு நேர்ந்து விடாது பார்த்துக் கொள்ளல் அவசியமாகும்.


### இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் - 3
# பொன்னியின் செல்வன்
### காவியத் தொடர் 613



"வாணர் குலத்து வீரரே! தாங்கள் கூறுவது எனக்கு விளங்கவில்லை. என் தம்பியைப் பற்றி ஏன் இப்பேர்ப்பட்ட அவதூறு கூறுகிறீர்?" "அவதூறு ஒன்றுமில்லை, அம்மணி! உண்மையைத் தான் கூறுகிறேன் கண்ணால் கண்டு, காதினால் கேட்டதைச் சொல்கிறேன்."

"மேலே சொல்லுங்கள்! எவ்வளவு கஷ்டமான விடயத்தைக் கேட்கவும் இப்பொழுது நான் சித்தமாயிருக்கிறேன்." "ஓடக்காரப் பெண் பூங்குழலி என்பவளைப்பற்றிச் சொன்னேன் அல்லவா? இலங்கைக்கு என்னைக் கொண்டு போய்ச் சேர்த்தவளும் அவள்தான். இளவரசரையும் என்னையும் கடலிலிருந்து காப்பாற்றியவளும் அவள்தான். சூடாமணி விஹாரத்துக்கு இளவரசரைப் படகில் ஏற்றிக் கொண்டு போயிருப்பவளும் அவள்தான். சேந்தன் அமுதனை மட்டும் நம்பி இளவரசரை நான் ஒப்புவித்து வந்திருக்க மாட்டேன். பூங்குழலியை நம்பித்தான் ஒப்புவித்திருக்கிறேன். அந்தப் பெண்ணுக்கு ஆயிரம் உயிர் இருந்தால் அவ்வளவையும் இளவரசருக்கு அர்ப்பணம் செய்வாள்"

"அதனால் என்ன? ஓடக்காரப் பெண் ஓடக்காரி தானே? உலகமாளப் பிறந்தவனை மணப்பது பற்றி அவள் கனவு காணமுடியுமா? தரையில் தத்திக் குதிக்கும் சிட்டுக் குருவி வானத்தில் உயரப் பறந்து, வட்டமிடும் கருடனைப் பார்க்க முடியுமா?"

"ஏன் முடியாது? சிட்டுக் குருவியும் கருடனை அண்ணாந்து பார்க்கலாம் கருடனும் சிட்டுக்குருவியைக் குனிந்து பார்த்து ஆசைப்படலாம்."

"என் தம்பியின் மனத்தில் அப்படி ஏதேனும் எண்ணம் உதித்திருந்தால், அதைப் நான் போக்குவேன். கூடவே கூடாது! எத்தனையோ அபாயங்களிலிருந்து அருள்மொழிவர்மனை நான் தப்புவித்திருக்கிறேன். இந்த ஓடக்காரியின் மோக வலையிலிருந்தும் நான் அவனை தப்புவிப்பேன்".


"ஓடக்காரியென்றால் அவ்வளவு தள்ளுபடியா? குலமும் கோத்திரமும் அவ்வளவு முக்கியமா? ஓடக்காரியின் உடம்பில் ஓடுவதும் சிவப்பு இரத்தந்தானே? அவளுடைய நெஞ்சும் அரண்மனையில் பிறந்த இளவரசிகளின் நெஞ்சைப் போல் துடிப்பதில்லையா? பார்க்கப் போனால் இளவரசிகளின் அன்பில் இராஜ்ய ஆசை முதலியவை கலந்திருக்கலாம். ஆனால், அந்த ஓடக்காரப்பெண்ணின் அன்பு மாசற்றது, புனிதமானது. இளவரசரும் அவ்வாறு தான் நம்புகிறார். மற்றவர்கள் ஏன் குறுக்கே வந்து தடை செய்ய வேண்டும்? இப்போது வந்து, என் விடயத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். என்னுடைய நெஞ்சைப் பிளந்து அதனுள் இருப்பதைத் தங்களுக்கு நான் வெளியிட்டுக் காட்ட முடியுமானால்".

வேண்டாம், வேண்டாம். உம்முடைய நெஞ்சில் இருப்பது அப்படியே பத்திரமாயிருக்கட்டும். அதுதான் நல்லது. அன்பு, ஆசை, காதல் என்பவையெல்லாம் உலகில் பிறந்த மற்றவர்களுக்குச் சரிதான். ஆனால் இராஜ்யம் ஆளப்பிறந்தவர்களின் விடயம் வேறு. அவர்கள் இராஜ குலத்திலேயே திருமணம் செய்து கொள்ள வேண்டும். மனத்தைச் சிதற விடக் கூடாது. தவறினால் அதன் மூலம் பல தொல்லைகள் ஏற்படும். எங்கள் குடும்பத்திலேயே அதற்குத் தகுந்த உதாரணம் இருக்கிறது. என் தந்தை யின் இளம்பிராயத்தில் இராஜ்யம் அவருக்கு வரும் என்ற உத்தேசமே இல்லாத போது இப்படித் தான் காட்டில் வளர்ந்த ஒரு பெண்ணை! ஆனால் இதையெல்லாம் இப்போது உமக்கு நான் எதற்காகச் சொல்லவேண்டும்?

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு புத்தூர் பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# எருமைப்பால்



ஒரு கிராமத்தில் ஒரு பூனை இருந்தது. அது ஒரு நாள் பாலை திருடி விட்டது. பால் எருமைப்பால். நன்றாக வயிறு நிறையக் குடித்து விட்டு ஒரு மூலையில் ஒதுங்கித் தூங்கியது.

பாலின் குணத்தால் பாவம் பூனையின் புத்தி மந்தமாய் போய் விட்டது. என்னைப் பார்த்து ஏன் யாரும் பயப்படுவதில்லை? மாமா- புலியைக் கண்டால் எல்லோரும் பயப்படுகிறார்களே நானும் புலியைப் போல தானே இருக்கின்றேன். என்று குள்ள நரியைக் கேட்டது.

நரி தெரிந்து கொண்டது. இந்தப் பூனை எருமைப் பாலை அதிகமாக குடித்துவிட்டது. அதனால் தான் இப்படி பைத்தியம் பிடித்து விட்டது என்று. அது ஒரு குறும்பு செய்தது. பூனையே! உனக்கு இது தெரியவில்லையா? புலிக்கு நல்ல நீண்ட பட்டைகள் மஞ்சளும் கறுப்புமாக இருக்கின்றன. அதைப் பார்த்து பயப்படுகிறார்கள். உன் தோல் ஒரே மாதிரி சாம்பல் நிறமாக இருக்கிறது அதை கண்டு இது பூனை சாதுப் பிராணி என்று யாரும் பயப்படுவதில்லை. இப்படி நரி சொல்ல இதற்கு என்ன செய்வது என்று பூனை கேட்டது.

அதற்கு என்ன நீ தான் அடுப்பண்டையே தினமும் இருக்கிறாயே. பட்டை பட்டையாக வடுக்கள் உண்டாகும் படி சூடு போட்டுக் கொள் என்றது. குள்ளநரியின் யோசனையை பூனை நம்பி சூடு போட்டுக் கொண்டது. பாவம் பூனை மிகவும் கஷ்டப்பட்டது. புண் ஆறுவதற்கு ஒரு வாரம் ஆகி விட்டது.

ஆனால் உடம்பில் புலியை போல் பட்டை பட்டையாக வடுக்கள் உண்டாகி இருப்பதைக் கண்டு பூனை மிகவும் சந்தோசப்பட்டது. இனிமேல் நானும் புலியானேன் என்று தனக்குள் சொல்லிக் கொண்டு புறப்பட்டது. தெருவில் ஒரு மாடு இருந்தது.

அதன் எதிரிலே இந்த பூனை நின்று வெறித்து பார்த் தது. மாடு பயப்படவில்லை அது ஏன் பயப்படும். பூனையை அது லட்சியமே செய்யவில்லை. அதன் பாட்டிற்கு புல் மேய்ந்து கொண்டிருந்தது.

அங்கிருந்த ஒரு நாய் பூனையை பார்த்து குரைத்தது. பூனை நாயைப் பார்த்து கொண்டு தைரியமாக தன்னுடைய தோலில் சுட்ட வடுக்களை நன்றாகக் காட்டி கொண்டு நின்றது.

நாய் அதை கவனிக்காமல் பூனையைத் துரத்திக் கொண்டு வந்தது. பாவம் பூனைக்கு பயமாகி விட்டது. ஒரு வீட்டின் மேல் குதித்து ஏறிக் கொண்டு நான் ஏமாந்து போனேன். சூடு போட்டுக் கொண்டது தான் லாபம். ஒரு வித்தியாசமும் இல்லை. தெய்வாதீனம் வீடு மேல் குதித்து ஓடி தப்புவதை மறந்து விடவில்லை. நான் இன்று தப்பினேன் என்று தனக்குள் சொல்லிக் கொண்டது.

என்ன சமாசாரம் என்று கேட்டது நரி. பூனை வெட்கப்பட்டு பேசவில்லை. " இனிமேல் எருமைப்பால் குடிக்காதே" என்று குள்ளநரி பூனைக்கு சொல்லிவிட்டு ஓடிப்போயிற்று

ப.ரிது,
புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளில் தேங்கிக்கிடப்பதே முன்னேற்றத்திற்கான முக்கிய தடையாகும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கூனியின் குணமும் சகுனியின் இயல்பும்

எல்லோரும் ஒரே குணவியல்புடன் இருக்க முடியுமா? என்றால் இல்லவே இல்லை.

ஒவ்வொருவரும் தத்தம் சிந்தனைக்கு ஏற்ப குணவியல்புகளில் வேறுபட்டவர்களாக இருப்பர்.

இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த இறைவன் அனைவரையும் ஒரே குணவியல்புடன் – ஒரே தன்மை வாய்ந்த அறிவுடைமையுடன் படைத்திருக்க முடியும்.

அவ்வாறான படைப்பு இந்த உலகில் எந்த ஆக்கத்தையும் தரமாட்டா.

ஆம், எலியைப் படைத்த இறைவன் பூனையையும் படைத்தான். அப்போதுதான் பூனையும் எலியும் விழிப்புணர்வோடு தம்மைப் பாதுகாத்துக் கொண்டு வாழ வேண்டும் என்ற உணர்வோடு உற்சாகமாகச் செயற்படும்.

மாறாக எலிக்கு எதிரிகள் இல்லை என்றால், பூனையின் மிக்க நட்பு எலி என்றால், அவற்றுக்கு ஏது வாழ்வு. இதேபோன்றுதான் அனைத்தும்.

ஒரே மொழி, ஒரே இனம், ஒரே சமயம் என்பதாக இப் பிரபஞ்சத்தைப் படைத்தருளுவது ஒன்றும் இறைவனுக்குப் பெரிய காரியமல்ல.

ஆனால் எல்லாம் ஒன்றென்றிருந்தால், அத்தனையும் இல்லாமல் போய்விடும்.

ஆம், ஒரே சமயம் என்ற நிலைமை இருந்தால்; உலக மக்கள் முதலில் கடவுளைத்தான் மறந்திருப்பர்.

ஒரே மொழி என்றால், இந்த உலகம் சைகை மொழியில்தான் உரையாடியிருக்கும்.

ஆக, எதுவும் ஒன்றுக்கு மேற்பட்டு இருக்கும்போதுதான் அவை கடும் போட்டியிட்டு உயிர்ப்போடு வாழ்ந்து கொள்ளும்.

அந்த வகையில் இராமாயணத்தில் கூனி, அவதார புருஷராகிய இராமபிரானின் பட்டாபிசேகத்தைக் குழப்புவதற்காகப் பிறந்தாள்.

அவளின் உடற்கூனும் உள்ளத்து அங்கவீனமும் இல்லாதிருந்தால், இராமாயண காப்பியம் நமக்குக் கிடைத்திருக்க மாட்டாது.

ஆக, இராமருக்கு முன்னதாகவே அவரின் பட்டாபிஷேகத்தைக் குழப்புகின்ற மந்தரை எனும் கூனி மண்ணில் பிறந்து விட்டாள்.

கூனியின் பிறப்பு இராமரைக் காட்டுக்கு அனுப்புவது மட்டுமல்ல, இராவண வதத்துக்கும் அதுவே காரணம்.

இதுபோன்றுதான் மகாபாரதத்துச் சகுனி.

கௌரவர் சேனைக்கான அழிவு; கௌரவர்களைக் காப்பாற்வதற்காகச் சூழ்ச்சி செய்த சகுனியால் ஆயிற்று.

சூதில் சகுனியின் சூழ்ச்சி இல்லையாயின், பாண்டவர்கள் வனவாசம் செல்வது ஒருபோதும் நடந்திருக்காது.

அவர்கள் வனம் செல்லாவிடில், பகவத் கீதையை நமக்கு யார் தருவார்.

ஆக கூனி, சகுனி என்போர் இன்னும் உயிர்ப்போடுதான் இருக்கிறார்கள். இதுவே உலக நியதியாம்.

## குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்கத் தயார்

### முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன்

(கொழும்பு)

அண்மையில் சொகுசு கார் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்திற்கு ஆஜராகி வாக்குமூலம் வழங்கத் தயார் என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

இதில் பெர்னாண்டோ தனது சட்டத்தரணி ஊடாக நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் இதனை அறிவித்துள்ளார்.

அத்துடன் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ தம்மை கைது செய்வதைத் தடுக்க உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அங்கு, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவில் இன்று ஆஜராகி, அது தொடர்பான சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்கத் தயார் என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தனது சட்டத்தரணி ஊடாக நீதிமன்றுக்கு அறிவித்தார்.

அதையடுத்து, மனுவை வரும் 25ம் தேதி விசாரிக்க உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நடமாடும் தேங்காய் விற்பனை இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

தேங்காய் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் சுற்றுச்சூழல், வனவிலங்கு மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சகம் நடமாடும் தேங்காய் விற்பனைத் திட்டத்தை இன்று ஆரம்பிக்கவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாகக் கொழும்பு, ஸ்ரீ ஜெயவர்தனபுரக் கோட்டை மற்றும் கடுவெல ஆகிய இடங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய கொழும்பு, வெலிக்கடை, கிருலப்பனை மற்றும் நிதி அமைச்சினைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடமாடும் வாகனங்கள் ஊடாக தேங்காய் கொள்வனவு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது நுகர்வோர் ரூ. 100 -120 வரையில் தேங்காய்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனச் சுற்றுச்சூழல், வனவிலங்கு மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று (22) வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 288 ரூபாய் 65 சதம், விற்பனைப் பெறுமதி 297 ரூபாய் 65 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 373 ரூபாய் 68 சதம், விற்பனைப் பெறுமதி 388 ரூபாய் 32 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## முல்லைத்தீவில் இரத்ததான முகாம்

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரிச் சமூகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று புதன்கிழமை (23.10.2024) காலை 09 மணி தொடக்கம் பிற்பகல் 01.30 மணி வரை மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும், ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7)

## இரண்டு சடலங்கள் கண்டியில் மீட்பு

கண்டி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளிலிருந்து இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர்கள் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, கண்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சங்கராஜ மாவத்தையில் உள்ள உணவு விடுதி ஒன்றிற்கு அருகிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேலும், கண்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பேராதனை வீதியில் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ம-7)

## பரிசளிப்பு நிகழ்வு

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் நீர்வேலி உப அலுவலக பொது நூலக சமூகத்தினால் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யா.நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நீர்வேலி உப அலுவலக பொறுப்பதிகாரி க.சுமரதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் அவர்களும், சிறப்பு விருந்தினராக யாழ்.அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் திருமதி ஶ்ரீரதி முருகசோதி அவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-7)

## மின்சார வேலியில் சிக்கி சிறுத்தை உயிரிழப்பு

ஹட்டனில் அனுமதியின்றி பண்ணையில் அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்கி சிறுத்தையொன்று உயிரிழந்துள்ளதால், பண்ணையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பண்ணையின் உரிமையாளர், இறந்த சிறுத்தையின் உடலை நேற்று முன்தினம் வீட்டின் அருகே உள்ள நிலத்தில் புதைத்துள்ளார்.

நேற்று (22) நல்லதண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் மற்றும் ஹட்டன் பொலிஸ் அதிகாரிகள் சிறுத்தையின் சடலத்தை மீட்டதுடன், சிறுத்தையை கொன்ற சந்தேகநபரை கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தேகநபர் ஆடு மற்றும் கோழிப் பண்ணை நடத்தி வருவதாகவும், சிறுத்தை கோழிகளை வேட்டையாட வருவதால் கோழி மற்றும் ஆடுகளை சிறுத்தையிலிருந்து காப்பாற்றுவதற்காக பண்ணையில் மின்சார வயர்களை இட்டுள்ளதாகவும் வனவிலங்கு அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

ஹட்டன் நீதவான் உத்தரவின் பிரகாரம், 4 வயதுடைய இறந்த சிறுத்தையின் சடலம் பிரேத பரிசோதனைக்காக ரன்தெனிகல வனவிலங்கு கால்நடை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கூரை வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழப்பு

மாத்தறை, அக்குரஸ்ஸ நகரத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்திற்கு அருகில் உள்ள பழைய கட்டிடம் ஒன்றின் கூரை உடைந்து வீழ்ந்து ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை கதிரத்தஹேன பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய ஹேவாபெட்டகே ரஜித் பிரியந்த என்பவரே உயிரிழந்துள்ளனர்.

அக்குரஸ்ஸ நகரத்தில் அமைந்துள்ள பழைய கட்டிடம் ஒன்றின் இரண்டாவது மாடியின் கொன்கிரீட் தளத்தை அகற்றும் பணியில் இருவர் ஈடுபட்டிருந்துள்ளனர்.

அவர்களில் ஒருவரின் தலையில் கூரையின் ஒரு பகுதி உடைந்து வீழ்ந்துள்ள நிலையில் சுவரின் ஒரு பகுதியும் இடிந்து வீழ்ந்துள்ளது.

படுகாயமடைந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி I

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

12

இலங்கை குடியரசான பின் பாராளுமன்றம் தேசியஅரசுப்பேரவை (National State Assembly) என அழைக்கப்பட்டது.

### தேசிய அரசுப்பேரவை (National State Assembly)

தேசிய அரசுப் பேரவை (National State Assembly) என்பது இலங்கையின் முதலாவது குடியரசு. அரசியலமைப்பின்படி 1972 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சட்டவாக்க சபை ஆகும். 1947 இல் உருவாக்கப்பட்ட இரு அங்க இலங்கை பாராளுமன்றம் (இலங்கை பிரதிநிதிகள் சபை மற்றும் இலங்கை செனட்சபை) ஆகியவை இல்லாதொழிக்கப்பட்டு ஓரங்க முறைமையுடன் கூடிய தேசிய அரசுப் பேரவை உருவாக்கப்பட்டது.

1970ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கை பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி ஏற்கனவே, 1947 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் நடைமுறையில் இருந்த சோல்பரி அரசியலமைப்பிற்கு பதிலாக புதியதோர் அரசியல் அமைப்பினை உருவாக்கி, 1972 மே 22ஆம் திகதி பிரகடனப்படுத்தியது. இந்த அரசியலமைப்பு முதலாம் குடியரசு அரசியலமைப்பு எனப்படுகின்றது. 1972-1978 காலப்பகுதியில் சட்டவாக்கத் துறையான பாராளுமன்றம் தேசிய அரசுப் பேரவை என்று கூறப்பட்டது.

1972 அரசியலமைப்பின் 77 ஆம் உறுப்புரைப்படி: அமைக்கப்படும் தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கைக்கு இணங்க மக்களால் சர்வஜன வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை மட்டுமே தேசிய அரசுப் பேரவை கொண்டிருக்கும்.

1974 ஆம் ஆண்டில் நோயெல் தித்த வெல தலைமையில் அமைக்கப்பட்ட தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவானது தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர் எண்ணிக்கையை 168 ஆக வரையறை செய்தது. அதாவது 1971ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டின்படி, இலங்கையின் மொத்த சனத்தொகையில் 75000 மக்களுக்கு ஒரு பிரதிநிதியென்றும் 1000 சதுரமைல்களுக்கு ஒரு பிரதிநிதியென்றும் தேசிய அரசுப் பேரவை பிரதிநிதிகள் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது.

மாகாண மட்டத்தில் பல அங்கத்தவர்கள் கொண்ட தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டாலும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் மொத்த அங்கத்தவர்கள் எண்ணிக்கை 168 ஆக இருத்தல் வேண்டும். இவ் வரம்புகளை மீறாது புவியியல் அம்சங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பவற்றை கருத்தில் கொண்டு தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயம் செய்யப்படவேண்டும், தேர்தல் தொகுதிகளுக்குப் பெயரிடல் என்பனவும் உள்ளடங்கியிருந்தன.

இக் குழுவினால் 6 பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. அவ்வாறு உருவாக்கப்பட்ட பல் அங்கத்தவர்கள் தொகுதிகள் பின்வருமாறு, மத்திய கொழும்பு மற்றும் நுவரெலியா-மஸ்கெலியாஆகிய இரண்டும் 3 அங்கத்தவர்கள் தொகுதிகளாகும். மட்டக்களப்பு, ஹரிஸ்பத்துவ, பேருவளை மற்றும் பொத்துவில் இரட்டை அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள் ஆகும்.

மற்றவை எல்லாம் ஒற்றை அங்கத்தவர் தேர்தல் தொகுதிகள் ஆகும். எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் 168 பிரதிநிதிகளும் 160 தேர்தல் தொகுதிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்த 160 தேர்தல் தொகுதிகளே தற்போதைய தேர்தல் முறைமையின் கீழ் வாக்கெடுப்பு பிரிவுகளாக (Polling Divisions) ஆக உள்ளன.

விஸ்தீரணம் மற்றும் சனத்தொகை (மக்கள் தொகை கணக்கெடுப்பு1971) அடிப்படையில் மாகாண மட்டத்தில் மொத்தப் பிரதிநிதிகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டனர். மேல் மாகாணம்-39, மத்திய மாகாணம்-24, தென் மாகாணம்-21, வட மாகாணம்-14, கீழ் மாகாணம்-12, வடமேல் மாகாணம் - 19, வட மத்திய மாகாணம்-10, ஊவா மாகாணம்-12 மற்றும் சப்பிரகமுவ மாகாணம-17. மொத்தம் -168.

வட மாகாணத் தேர்தல் தொகுதிகள் ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், கோப்பாய், பருத்தித்துறை. சாவகச்சேரி, மானிப்பாய் (உடுவில் தேர்தல் தொகுதி மானிப்பாய் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது), நல்லூர், உடுப்பிட்டி, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு (முல்லைத்தீவு புதிதாக உருவாக்கப்பட்டது)

வட மாகணத்தில் உள்ள இந்த 14 தேர்தல் தொகுதிகளே தற்போதைய வாக்கெடுப்பு பிரிவுகளாக (Polling Divisions) ஆக உள்ளன. தற்போதும் வாக்கெடுப்பு பிரிவுகளின் அடிப்படையிலேயே தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுகின்றன.

திருகோணமலை மாவட்டத் தேர்தல் தொகுதிகள் திருகோணமலை, மூதூர், சேருவில (சேருவில புதிதாக உருவாக்கப்பட்டது). மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் தொகுதிகள் கல்குடா, மட்டக்களப்பு (இரட்டை அங்கத்தவர்கள்), பட்டிருப்பு, கல்முனை, பொத்துவில் (இரட்டை அங்கத்தவர்கள்) . அம்பாறை, சம்மாந்துறை (நிந்தவூருக்கு பதிலாக) ஆகியவையாகும்.

எல்லை நிர்ணய ஆணைக்குழு குறிப்பிட்டதுபோல் ஒவ்வொரு சமூகத்திற்கும் கிடைக்கவேண்டிய அங்கத்தவர்கள் எண்ணிக்கையையும் தேர்தலில் கிடைக்கப்பெற்ற அங்கத்தவர்கள் எண்ணிக்கையையும் ஒப்பிடும்போது அட்டவணை - 4இல் காட்டப்பட்டது போல் அமைந்திருந்தது.

அரசியலமைப்பின் 40 ஆம் உறுப்புரை (1) பந்தி தேசிய அரசுப் பேரவையின் பதவிக் காலத்தைப் பின்வருமாறு வரையறை செய்கின்றது: அவ்வரசியலமைப் பின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு தேசிய அரசுப்பேரவையும், அது முன்னரே கலைக்கப்பட்டாலொழிய அதன் முதற் கூட்டத் திகதியிலிருந்து 6 ஆண்டு காலத்துக்குத் தொடர்ந்திருத்தல் வேண்டும். அதற்கு மேற்படலாகாது.

அந்த 6 ஆண்டு கழிவதே தேசிய அரசுப் பேரவையைக் கலைப்பதாகச் செயற்படுதல் வேண்டும்.

இதன்படி தேசிய அரசுப் பேரவையின் கூடிய பதவிக்காலம் 6 ஆண்டுகள் என்பதை தெரிந்து கொள்ள முடிகின்றது. பொதுத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற எவரும் தேசிய அரசுப்பேரவை உறுப்பினராகத் தகுதியுடையவர்.

### இலங்கையின் முதலாவது தேசிய அரசுப்பேரவைத் தேர்தல் - 1977

இலங்கையின் முதலாவது தேசிய அரசுப்பேரவைத் தேர்தல் (8 ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1977) ஜூலை 21 இல் நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்தின் தேசிய அரசுப்பேரவைக்கு 168 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத் தேர்தல் நடத்தப்பட்டது. 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் நடத்தப்பட்ட ஒரேயொரு பொதுத் தேர்தல் இது மட்டுமேயாகும்.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான இடதுசாரிக் கூட்டணி அரசு தனது ஆட்சிக் காலத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு மக்களிடையே செல்வாக்கை இழந்திருந்தது. அவரது பொருளாதாரக் கொள்கை நாட்டில் தொழில் வளர்ச்சி கண்டிருந்தாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியவில்லை.

அரசியலமைப்பின் படி 1975 ஆம் ஆண்டில் நடத்தப்படவேண்டிய தேர்தல் 1972 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அரசியலமைப்பின் படி பாராளுமன்றத்தின் பதவிக்காலம் மேலும் இரண்டாண்டுகள் நீடிக்கப்பட்டது.

(தொடரும்...)

அட்டவணை-4

| எல்.எம். டி. த. சில்வா எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் படி கிடைக்கவேண்டிய அங்கத்தவர்கள் எண்ணிக்கை | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியர் (முஸ்லீம் தவிர) | முஸ்லீம் | தீர்மானிக்க முடியாத மற்றும் ஏனைய இனத்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| நாட்டின் (1971ம் ஆண்டு) சனத்தொகை அடிப்படையில் | 121 | 19 | 16 | 11 | 1 | 168 |
| **தேர்தல்களில் கிடைக்கப் பெற்ற அங்கத்தவர்கள்** | | | | | | |
| 1977ம் ஆண்டுத்தேர்தல் முடிவுகள் | 137 | 18 | 1 | 12 | 0 | 168 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவிசாவளையில்...

பஸ்கள் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த நபர்கள் அவிசாவளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## ரூ.30 மில்லியன்...

பிற்பகல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்த இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் இந்த உதவித் தொகையை உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியிடம் கையளித்தார். (ம-7)

## இலங்கை...

- ஜனாதிபதியின் செயலாளருடன் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக குமாநாயக்கவை நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார்.

வடக்குக் கடலில் தற்போது நிலவும் கடற்றொழில் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்படி, ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நீண்டகாலத் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தினர். (ம-7)

## பொருளாதார...

மாவட்டப் பிரதி அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பொருளாதார மத்திய நிலையத்தை வர்த்தக நடவடிக்கைகளுக்காக மீள ஆரம்பிப்பது மற்றும் பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து விவசாயம் மற்றும் பழ வகைகள் போன்ற உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வெளி மாவட்ட பொருளாதார மத்திய நிலையத்திற்கும் ஏனைய இடங்களுக்கும் அனுப்பிவைத்தல் மற்றும் வெளி மாவட்ட உற்பத்திப் பொருட்களை யாழ்ப்பாணப் பொருளாதார மத்திய நிலையத்திற்கு எடுத்து வந்து சந்தைப்படுத்தல் போன்ற விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அரசாங்க அதிபர், அடுத்த கூட்டத்தில் இதனுடன் தொடர்புடைய வணிகர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தினர், நிபுணர்கள் மற்றும் உருளைக்கிழங்கு, வெங்காயம், வாழைக்குலை போன்ற விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகள் ஆகியோரை அழைத்து அவர்களின் மேலதிக ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவித்தார். (ம-7,33)

## வன்னி...

செய்த மனு மீதான தீர்ப்பு இன்று வழங்கப்படும் என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இரு தரப்பு வாதங்களையும் பரிசீலித்த உச்ச நீதிமன்றம், நிராகரிக்கப்பட்ட வேட்புமனுவை, தற்போதுள்ள சட்டத்தின்படி சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரி ஏற்க வேண்டும் என்று சுட்டிக் காட்டியது.

அதன்படி, இந்த வழக்கின் தீர்ப்பு மற்றும் காரணங்கள் இன்று அறிவிக்கப்படும் என்று உச்ச நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு உத்தரவிட்டது. (ம-7)

## உண்டியல்...

திங்கட்கிழமை இரவு உண்டியல் திருட்டு இடம்பெற்றிருந்த நிலையில் ஆலய பாதுகாவலர்கள் திருடனை மடக்கிப் பிடித்துள்ளனர்.

ஆலயத்தில் இருந்த காவலர்கள், உண்டியலை எடுத்துக் கொண்டு நபர் ஒருவர் தப்பி ஓடிய நிலையில் பின் தொடர்ந்து சென்று அவரை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். (ம-7,30)

## ஈஸ்டர்...

கம்மன்பில அண்மையில் வெளியிட்டிருந்த நிலையில், ரணிலின் விசேட அறிக்கையை வெளியிடத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழ்.நீதிமன்றில்...

உயர் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது அவரது சட்டத்தரணி [illegible] சில்வா ஊடாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் காணாமல்போன செயற்பாட்டாளர்களான லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் கடத்தப்பட்டமை தொடர்பான வழக்கு, அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டா, யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் சாட்சியமளிக்க முதலில் அழைக்கப்பட்டிருந்தார்.

எனினும், பாதுகாப்புக் காரணங்களால் அங்கு ஆஜராக முடியவில்லை எனத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாத நிலையில், இலங்கையில் உள்ள வேறு எந்த நீதிமன்றத்திலும் சாட்சியங்களைச் சமர்ப்பிக்கத் தயார் என ராஜபக்ஷவின் சட்டத்தரணி உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய முன்னைய தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புத் தொடர்பான கரிசனைகள் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியாக இருக்கும்போது கோட்டாபய ராஜபக்ஷவை சாட்சியாக அழைக்க முடியாது என்று முந்தைய தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நீதிபதிகள் பிரீத்தி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த வாதங்களை விசாரித்தது.

ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகிக்காததால், சாட்சியம் அளிக்கும்படி கட்டாயப்படுத்த உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர்கள் கோரியுள்ளனர். இந்த வழக்கை மேலும் பரிசீலிப்பதற்காக, அடுத்த விசாரணையை மார்ச் 18, 2025க்கு நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

முன்னதாக யாழ்ப்பாணத்தில் காணாமல் போன [illegible] உறவினர்களின் குடும்பத்தினரால் தாக்கல்செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவையடுத்து யாழ். மஜிஸ்ரேட் நீதி மன்றம் 2019இல் கோட்டாவுக்கு அழைப்பாணை விடுத்தது.

அந்த நேரத்தில், அவர் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருந்ததால் யாழ்ப்பாணத்திற்குப் பயணிக்க முடியவில்லையெனத்தெரிவித்ததுடன் அழைப்பாணையைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரியிருந்தார். (ம-7)

## இலங்கை - சீனா...

இலங்கை - சீனா இரு தரப்பு உறவுகள் தொடர்பில் சீனத் தூதுக்குழுவின் பிரதிப் பிரதானிக்கும் ஜனாதிபதியின் செயலாளருக்கும் இடையில் நேற்றுக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

சீனத் தூதரகத்தின் பிரதிப் பிரதானி சூ யன்வெய் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

சீனா-இலங்கை இருதரப்பு உறவுகளைப் பல்வேறு துறைகளில் மேலும் விரிவுபடுத்துவது குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.(ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.10.22
சீட்டிழுப்பு இலக்கம் 5633
U 2 7 4 3 4 7
அத சம்பத U 4 3 4 7
சீட்டிழுப்பு இலக்கம் 208
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.10.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1663
J 03 39 44 71 J
Double Chance 109837

மெகா பவர்
திகதி 22/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1981
P 23 07 12 24 52
144894

லக்கி 7 VIP
திகதி 2024.10.22
சீட்டிழுப்பு இலக்கம் 0459
P 2 4 3 6 5 2 P

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3875
சீட்டிழுப்பு திகதி 22.10.2024
K 23 29 43 58
K 089438

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.22
சீட்டிழுப்பு இலக்கம் 942
கன்னி 04 35 41 62 கன்னி
130605 23

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா (சம்பத)
22.10.2024 வெற்றி வாரம் 341 வர்ணம் சிவப்பு
P 8 6 6 2 2 7
59730
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,212,744.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2607 வர்ணம் வெளிர் நீலம்
சீட்டிழுப்பு திகதி 22.10.2024 தினம் செவ்வாய்
06 35 49 50 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,397,784.00

சனிதா
திகதி 2024.10.22 வெற்றி வாரம் 4768 வர்ணம் பச்சை
15 47 60 68 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,839,218.40
90121

சசிரி
வெற்றி வாரம் 544
சீட்டிழுப்பு திகதி 2024.10.22
08 31 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,756,320/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4319 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.10.22 தினம் செவ்வாய்க்கிழமை
14 20 51 56
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,827,512.80
229371

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 30 19 38 48 50
சீட்டிழுப்பு வாரம் 1783
22.10.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 551,844,556.20

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2433
சீட்டிழுப்பு திகதி : 2024.10.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,356,304.80
அத கோடிபதி ADA KOTIPATHI
05 62 70 75 F
622458


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழா நாயகியை மனதார வாழ்த்துகிறோம்



எமது பாடசாலையின்
ஆசிரியையாக அரும்பெரும்
பணியாற்றி 22.10.2024
அன்று இளைப்பாறும்

**திருமதி அனுசா தவறஞ்சிற்**
(ஆசிரியை,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

அவர்களுக்கு
இனிய மணிவிழா
வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக
அமையவும் பிரார்த்திக்கிறோம்.

Congratulations

இந்துவின் கரங்கள் தமக்கொரு நித்திய உரங்கள் ஈந்து
முழுமைதம் வரங்கள் சுரந்தோர் கன்றதன் அன்னையாக
கருணையீர் கடந்து செல்வீர் - அனுஷா மிஸ் உயிரியல்
அறிவினில் அன்பும் ஈந்து உயிரினின் அருகில் நின்றீர்
சிந்தனை வடிவம் கொண்டீர் சிறப்புற வாழ்க வென்போம்
முந்தைய வினையால் உம்மைப் பெற்றதும் உவகையாமே!

**சேவை விபரம்:**
- 1993 பங்குனி - 2011 தை
  யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
- 2011 தை - 2024 ஐப்பசி
  யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ஆசிரியர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
(C-1432)

# சேவைநயப்பு வாழ்த்துரை



Best Wishes!

## திருமதி அனுஷா தவறஞ்சிற்

22.10.2024 அன்றுடன் ஓய்வுபெறும் சக ஆசிரியை அவர்களுக்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்வதில் உவகை கொள்கிறோம்.

இந்துவின் மைந்தனை தன் மகவாய்க் கருதும்
முந்துமுன் சேவையை இன்றுடன் கண்டிலர்
உயிரியலில் மாணவரை உளமார உயர்த்திவிட்டீர்
உள்ளூரப் பலபேரை உன்னதமாய் வாழ வைத்தீர்.

உயர்தர விஞ்ஞானப்பிரிவு ஆசிரிய நண்பர்கள்
யாழ். இந்துக் கல்லூரி

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1438)

076 825 7716 (ஆகாஸ்)

லைடன் புடவை நிலையம்
யாழ்ப்பாணம்



எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் அனைத்து வகையான துணி வகைகள், ரெடிமேற் ஆடைகள், மகப்பேற்றுத் தாய்மார்கள், குழந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் மாணவர்களுக்கான சீருடைத் துணி வகைகள் போன்ற அனைத்து விதமான பொருட்களையும் 10% விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள்

தீபாவளியை முன்னிட்டு எதிர்வரும் 27.10.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று எமது வியாபார நிலையம் திறக்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

10% 12.10.2024 - 30.10.2024

Leyden Textile Center
410, Hospital Road, Jaffna.
021 222 2381
(C-1435)

## விபத்து; ஒருவர் பலி

இரத்தினபுரி, கஹவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெல்மடுல்ல - நோனாகம வீதியில் வெல்லந்துர பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கஹவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

கடும்மழையுடன் கூடிய வானிலை காரணமாக சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் சறுக்கிச் சென்று கவிழ்ந்து எதிர்த்திசையில் பயணித்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ம-7)

தேவை

நிறுவனம் ஒன்றிற்கு யாழ்.நகரில் அல்லது அதற்கு அண்டிய பகுதிகளில் ஒரு பரப்பிற்கு மேற்பட்ட காணி குத்தகைக்கு தேவை

தொடர்புகளிற்கு:
077 9191 529
(2379)

சிறுநீரகம் தேவை

அவசரமாக A+ வகை குருதியுடைய சிறுநீரகம் தேவைப்படுகிறது.
வயது எல்லை 25 - 40
தொடர்புகளுக்கு :
077 041 6405
Whatsapp
003161790096(கொலன்ற்)
(2333)

யாழ்ப்பாணம் - சென்னை
விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
35,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)
(466)

தேவை

நல்லூரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை

தொடர்புகளிற்கு :
077 9191 529
(2379)

நீங்களும் விரைவில் அமெரிக்காவில்...இன்னும் சில நாட்களே உள்ளன

அமெரிக்க அதிஸ்ட வீசா

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
55000 இலவச விசாக்கள்
0768226244
V2 Travels
0777468777 | 0743900350 | 0743900352 | 0768226237 | 0743900353 | 0743900351
0764550673 | 0768226240 | 0768226243 | 0777068777 | 0777720322 | 0764550675
0768226242 | 0768226238 | 0777726322 | 0764550674 | 0764550670 | 0777710322
0764550671 | 0776699892 | 0768226236 | 0768226230 | 0776697960

விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :
075 033 6759
(402)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 23.09.2024(திங்கட்கிழமை)
அன்று சிவபதமடைந்த எங்கள்
குடும்பத் தலைவர்



**அமரர். மார்க்கண்டு ஜோதிமார்க்கண்டு**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 23.10.2024 புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுவில் மேற்கு, சுன்னாகம்.
078 383 5354
077 918 0828
(460)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.